தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

**நிலைப்பயிரைக் காக்க உயிர்த்தண்ணீர்: பொதுப்பணித் துறையினர் பரிந்துரை**

தடப்பள்ளி, அரக்கன்கோட்டை வாய்க்காலில் நிலைப்பயிரைக் காக்க வரும் 20-ஆம் தேதி உயிர்த்தண்ணீர் விடுமாறு அரசுக்கு பொதுப்பணித் துறையினர் பரிந்துரை செய்துள்ளனர்.

பவானிசாகர் அணையிலிருந்து குடிநீருக்காகவும், பாசனத்திற்காகவும் பவானி ஆற்றில் தண்ணீர் திறந்து விடப்படுவது வழக்கம். கோபியை அடுத்த கொடிவேரி அணையிலிருந்து தடப்பள்ளி, அரக்கன்கோட்டை ஆகிய 2 வாய்க்கால்கள் துவங்குகின்றன. இந்த இரு வாய்க்கால்கள் மூலம் 24,508 ஏக்கர் நிலம் பாசன வசதி பெற்று வருகிறது.

கடந்த ஆண்டு வறட்சி காரணமாக இந்த இரு வாய்க்கால்களிலம் 2-ஆம் போக சாகுபடிக்கு தண்ணீர் திறந்து விடப்படவில்லை. அதன்பின்னர், பவானிசாகர் அணையின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் நல்லமழை பெய்த காரணத்தால், இந்த ஆண்டு ஜூன் 28-ஆம் தேதி முதல்போக சாகுபடிக்கு இரு வாய்க்கால்களிலும் தண்ணீர் திறந்து விடப்பட்டது.

இதனால் விவசாயிகள் நெல், கரும்பு, வாழை, மஞ்சள் போன்ற பயிர்களைப் பயிரிட்டனர். தற்போது நெல் அறுவடை முடிவடைந்துள்ள நிலையில், இரண்டாம் போகத்துக்கு தண்ணீர் திறந்து விடப்படுமா என்று விவசாயிகள் காத்திருக்கிறார்கள்.

இந்நிலையில், கரும்பு, வாழை, மஞ்சள் போன்ற நிலைப் பயிரைக் காப்பாற்றுவதற்காக தடப்பள்ளி, அரக்கன்கோட்டை வாய்க்காலில் வரும் 20-ஆம் தேதிமுதல் வரும் பிப்ரவரி 15-ஆம் தேதி வரை முறை வைத்து, தண்ணீர் விடுவதற்கு பொதுப்பணித் துறையினர் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளனர்.

## பவானிசாகர் நீர்மட்டம்

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை நிலவரப்படி 62.78 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 564 கனஅடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 300 கனஅடி நீரும், வாய்க்காலில் 1,950 கனஅடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர் இருப்பு 8.12 டி.எம்.சி.

## மகசூலை அதிகரிக்க உயிரியல் பயிர் மருந்து தெளிப்பது அவசியம்: வேளாண் உதவி இயக்குநர்

மகசூலை அதிகரிக்க உயிரியல் பயிர் மருந்துகள், உயிரி உரங்கள், நுண்ணூட்ட கலவை உரங்கள், விளக்குப் பொறிகளைப் பயன்படுத்துவது அவசியம் என்று மோகனூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் கிருஷ்ணசாமி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

உயிரியல் நோய் கட்டுப்பாட்டு மருந்துகளான டிரைக்கோடெர்மா விரிடி, சூடோமோனாஸ் புளூரோசன்ஸ் காரணிகளை அரிசி கஞ்சியுடன் கலந்து விதை நேர்த்தி செய்து, 24 மணி நேரம் நிழலில் உலர்த்தி, விதைப்பதன் மூலம் அல்லது இயற்கை உரங்களுடன் கலந்து ஒரு வாரம் வைத்திருந்து மண்ணில் இடுவதன் மூலம் மண்ணிலிருந்து வேர்களுக்கு பரவும் நோய்களைக் கட்டுப்படுத்தி வேர் வளர்ச்சி, பயிர் வளர்ச்சியைத் துரிதப்படுத்தலாம்.

உயிர் உரங்களான அசோஸ்பைரில்லத்தை தொழு உரத்துடன் கலந்து இடுவதால் காற்றிலுள்ள தழைச் சத்தை கிரகித்து பயிருக்கு அளிக்கும்.

பயிருக்கு வளர்ச்சி ஊக்கிகளாகவும், நோய், வறட்சி எதிர்ப்புத் தன்மையையும் அதிகரிக்கின்றன. பாஸ்போ பாக்டீரியா உயிர் உரம் இடுவதன் மூலம் மண்ணில் நீரில் கரையாமலுள்ள மணிச்சத்தை கரைத்து பயிருக்கு எளிதில் கிடைக்கச் செய்கிறது.

ரைசோபியம் உயிர் உரத்தை நிலக்கடலை பயிருக்கு இடுவதால் காற்றிலுள்ள தழைச் சத்தை கிரகித்து, வேர் முடிச்சுகளாக்கி, பயிரின் வளர்ச்சியையும், நிலக்கடலை பருப்பின் தரம், அளவையும் அதிகரிக்கிறது. மண்ணிலுள்ள நுண்ணூட்டச் சத்துக்கள் பற்றாக்குறையைப் போக்க, கரும்பு, நெல் பயிர்களுக்கென்றே உருவாக்கப்பட்ட நுண்ணூட்ட கலவை உரங்களை பயன்படுத்தி மகசூலை அதிகரிக்கலாம்.

பயிர்களில் பூச்சி தாக்குதலைக் கட்டுப்படுத்தும் விளக்குப் பொறிகள், 33 சத மானியத்தில் உள்ளன. இந்த விளக்குப் பொறிகள், இரவு நேரங்களில் இளம் அந்துப்பூச்சிகளை கவர்ந்திழுத்து, மகசூல் சேதத்தை குறைக்கின்றன. உயிரியல் பயிர் மருந்துகள், உயிர் உரங்கள், நுண்ணூட்ட கலவை உரங்கள், விளக்குப் பொறிகள் அனைத்தும் மோகனூர் வட்டார வேளாண் விரிவாக்க மையத்தில் விற்பனைக்குத் தயார் நிலையில் உள்ளன. விவசாயிகள் அவற்றை வாங்கிப் பயன்படுத்தி மகசூலை அதிகரித்துப் பயன் பெறலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### நாமகிரிப்பேட்டையில் ரூ.48 லட்சத்துக்கு மஞ்சள் ஏலம்

நாமகிரிப்பேட்டை வேளாண்மைக் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ரூ.48 லட்சத்துக்கு செவ்வாய்க்கிழமை மஞ்சள் ஏலம் நடைபெற்றது.

தமிழகத்தில் ஈரோட்டிற்கு அடுத்து நாமகிரிப்பேட்டையில் மஞ்சள் விளைச்சலும், விற்பனை மண்டிகளும் அதிகம் உள்ளன. நாமகிரிப்பேட்டையில் உள்ள வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்க வளாகத்தில் வாரந்தோறும் செவ்வாய்க்கிழமையில் ஏலம் நடைபெறும். இந்த ஏலத்தில் தனியார் மஞ்சள் மண்டிகள் உள்பட நாமகிரிப்பேட்டை, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, மங்களபுரம், மெட்டாலா, சேலம் சுற்று வட்டாரப் பகுதிகளில் உள்ள விவசாயிகள் தங்கள் மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.

65 கிலோ கொண்ட 1288 மூட்டைகள் விற்பனைக்கு வந்தன. விரலி ரகம் குவிண்டாலுக்கு அதிகபட்சமாக ரூ.9, 339-க்கும், குறைந்தபட்சமாக ரூ.5,109-க்கும் ஏலம் போனது. அதேபோல, உருண்டை ரகம் அதிகபட்சமாக குவிண்டாலுக்கு ரூ.7,399-க்கும், குறைந்தபட்சமாக ரூ.4, 171-க்கும் விலை போனது. பனங்காலி ரகம் அதிகபட்சமாக குவிண்டாலுக்கு ரூ.13009-க்கும், குறைந்தபட்சமாக ரூ.9,199-க்கும் ஏலம் போனது. இதில் ஒரே நாளில் ரூ.48 லட்சத்துக்கு மஞ்சள் வர்த்தகம் நடைபெற்றது.

**கரும்புக்கு உரிய விலையை வழங்க விவசாயிகள் சங்கம் வலியுறுத்தல்**

கரும்புக்கு உரிய விலை வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என, தமிழக விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியது.

கிருஷ்ணகிரி மாவட்டம், ஜெகதாப் கிராமத்தில் தமிழக விவசாயிகள் சங்கக் கிளை தொடக்க விழா அண்மையில் நடைபெற்றது. விழாவுக்கு, அந்தச் சங்கத்தின் கிருஷ்ணகிரி மத்திய மாவட்டத் துணைச் செயலாளர் ஏ.ராஜா தலைமை வகித்தார். மாநிலப் பொதுச் செயலாளர் கே.எம்.ராமகவுண்டர் சங்கக் கொடியை ஏற்றி சங்கத்தை தொடக்கிவைத்தார். மாவட்ட நிர்வாகிகள் கே.அசோக்குமார், கே.பெருமாள், வெங்கடேசன், எம்.ஜி.வேலு, மணிமேகலை, பால் உற்பத்தியாளர் சங்கத் தலைவர் சி.சக்திவேல், ஆலோசகர் நசீர் அகமது உள்ளிட்டோர் பங்கேற்றனர். இதில், நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்: ஒரு லிட்டர் பாலுக்கு உற்பத்தி மானியம் ரூ.6-ம், தீவனங்களை மானிய விலையிலும் வழங்க வேண்டும். கோமாரி நோயால் உயிரிழந்த கால்நடைகளுக்கு இழப்பீடாக ரூ.25 ஆயிரம் வழங்க வேண்டும். கரும்புக்கு உரிய விலை வழங்காததால், கரும்பு விவசாயிகள் மாற்றுப் பயிரைச் சாகுபடிக்குச் சென்று விட்டனர். இதனால், சர்க்கரை ஆலைக்கு வரும் கரும்பின் அளவு குறைந்துவிட்டது. கரும்புக்கு உரிய விலை வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஒவ்வொரு சர்க்கரை ஆலையிலும் மின்சாரம், எத்தனால் உற்பத்தி செய்ய வேண்டும். காவிரி - பாலாறு இணைப்புத் திட்டத்தை நடைமுறைப் படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட பல தீர்மானங்கள் நிறைவேற்றபட்டன.

**ஆடுகளுக்கு நீல நாக்கு நோய்: மாவட்ட நிர்வாகம் அறிவுரை**

சேலம் மாவட்டத்தில் ஆடுகளுக்கு நீல நாக்கு நோய் பரவாமல் இருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை, சிகிச்சை முறைகளை மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு:

தமிழகத்தின் அண்டை மாநிலங்களான கர்நாடகம், ஆந்திர மாநிலங்களில் வெள்ளாடு, செம்மறி ஆடுகளுக்கு நீல நாக்கு நோய் காணப்படுகிறது. கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு இந்த நோய்த் தமிழகத்தில் பரவி பெரும் சேதத்தை விளைவித்தது. இந்த நோய்க்கான வைரஸ், ஒரு வகை கொசுவின் மூலம் ஆடுகளிடையே பரவுகிறது.

இந்த நோய்த் தாக்கிய ஆடுகளுக்கு காய்ச்சல் அதிகமாக இருக்கும். மூக்கில் சளி வரும். வாய், உதடுகள், ஈறுகள் நாக்கு ஆகிய இடங்களில் புண்கள் உண்டாகும். ஆடுகளின் கால் குளம்புகளில் புண் ஏற்பட்டு நொண்டி நடக்கும். குளம்புகள் கழன்றுவிடும் வாய்ப்பும் உண்டு.

மேற்கண்ட அறிகுறிகளுடன் காணப்படும் ஆடுகளை மேய்ச்சலுக்கு விடாமல் அரிசி, கம்பு, கேழ்வரகு கஞ்சி காய்ச்சி கொடுக்க வேண்டும். வாய் புண்களை உப்புத் தண்ணீர் அல்லது 1 கிராம் பொட்டாசியம் பெர்மாங்கனேட் கலந்த நீரில் ஒரு நாளைக்கு 2 அல்லது 3 முறை கழுவிய பின் கிளிசரின் மருந்தைத் தடவலாம்.

ஆட்டுக் கொட்டகைக்கு அருகில் தண்ணீர் தேங்காமல் பார்த்துக் கொள்ளுதல், ஆடுகளை ஈரம், சேறு இல்லாத மேட்டுப்பாங்கான இடங்களில் வைத்து பராமரித்தல், நீர் தேங்கும் இடங்களில் கொசு ஒழிப்பு மருந்துகளைத் தெளித்தல், நீர்த்தேக்கத் தொட்டிகள், நீர் நிலைகளை கிருமி நாசினி மருந்துகளைப் பயன்படுத்தி சுத்தம் செய்தல் போன்றவற்றின் மூலம் ஆடுகளுக்கு நீல நாக்கு நோய் வராமல் காத்துக் கொள்ளலாம்.

மேலும், ஆடுகளுக்கு நீல நாக்கு நோய் அறிகுறிகள் ஏதேனும் தென்பட்டால் உடனடியாக அருகில் உள்ள கால்நடை மருந்தகம், கால்நடை உதவி மருத்துவர்களைத் தொடர்பு கொண்டு இந்நோய்க்கு சிகிச்சை அளிக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் க.மகரபூஷணம் கேட்டுக் கொண்டுள்.

### 31 விவசாயிகளுக்கு வேளாண் கருவிகள்

வேளாண் பொறியியல் துறை சார்பில் 31 விவசாயிகளுக்கு ரூ. 40.92 லட்சம் மதிப்பிலான வேளாண் கருவிகளை மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது செவ்வாய்க்கிழமை வழங்கினார்.

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், விவசாயிகளுக்கு கருவிகளை வழங்கி ஆட்சியர் பேசியது: தமிழக அரசு விவசாயிகளின் நலன் கருதி பல்வேறு வகையான நலத்திட்ட உதவிகளை செய்து வருகிறது.

வேளாண் பொறியியல் துறை மூலம் குறைந்த வாடகைக்கு வேளாண் கருவிகள், பண்ணைக் குட்டைகள் அமைத்தல், மானிய விலையில் கருவிகள் மற்றும் இயந்திரங்கள் வழங்குதல் உள்ளிட்ட திட்டங்கள்  செயல்படுத்தப்படுகிறது.

தற்போது 8 பேருக்கு ரூ. 11 லட்சத்து 40 ஆயிரத்து 840 மதிப்பிலான பவர் டில்லர்களை ரூ. 3.60 லட்சம் மானியத்திலும், 4 பேருக்கு ரூ. 28,300 மதிப்பிலான விசை தெளிப்பான்களை ரூ. 14,148 மானியத்திலும், 4 பேருக்க்கு ரூ. 21,400 மதிப்பிலான பேட்டரி தெளிப்பான்களை ரூ. 10,700 மானியத்திலும், ஒருவருக்கு ரூ. 3.25 லட்சம் மதிப்பிலான வைக்கோல் கட்டும் கருவி ரூ. 1 லட்சத்து 50 ஆயிரம் மானியத்திலும், ஒருவருக்கு ரூ. 3.43 லட்சம் மதிப்பிலான கதிரடிக்கும் கருவி ரூ. 1.50 லட்சம் மானியத்திலும், 7 பேருக்கு ரூ. 17 லட்சத்து 2 ஆயிரத்து 750 மதிப்பிலான விசை களை எடுப்பான்கள், ரூ. 6.93 லட்சம் மானியத்திலும், ஒருவருக்கு 93 ஆயிரம் மதிப்பிலான சுழல் கலப்பை, ஒருவருக்கு ரூ. 2.41 லட்சம் மதிப்பிலான நெல் நடவு இயந்திரம், ஒருவருக்கு ரூ. 1 லட்சத்து 28 ஆயிரத்து 500 மதிப்பிலான சோளம் கதிர் அடிக்கும் இயந்திரம், 2 பேருக்கு ரூ. 36,200 மதிப்பிலான தீவன புல் நறுக்கும் கருவி, ஒருவருக்கு ரூ. 28,000 ஆயிரம்

மதிப்பிலான புல்வெட்டும் கருவி என 31 விவசாயிகளுக்கு ரூ. 15 லட்சத்து 1,948 மானியத்தில், ரூ. 40 லட்சத்து 92 ஆயிரத்து 990 மதிப்பிலான வேளாண் இயந்திரங்கள் வழங்கப்படுகிறது. பெரம்பலூர் மாவட்டத்தில், வேளாண் பொறியியல் துறை சார்பில் நிகழாண்டில் 62 விவசாயிகளுக்கு ரூ. 64 லட்சத்து 58 ஆயிரத்து 871 மதிப்பிலான நலத்திட்ட உதவிகள், ரூ. 23 லட்சத்து 34 ஆயிரத்து 764 மானியத்தில் வழங்கப்பட்டுள்ளது என்றார் அவர். நிகழ்ச்சியில் வேளாண் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் ராஜேந்திரன், உதவி பொறியாளர்கள்  சிவக்குமார், ஆறுமுகம், இளநிலை பொறியாளர் சேகர் உள்ளிட்ட அலுவலர்கள் பங்கேற்றனர்.

## கோமாரி நோயால் இறந்த கால்நடைகளுக்கு இழப்பீடு கோரி விடுதலை சிறுத்தைகள் ஆர்ப்பாட்டம்

கோமாரி நோயால் இறந்த கால்நடைகளுக்கு இழப்பீடு வழங்க வலியுறுத்தி விடுதலை சிறுத்தைகள் கட்சியினர் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

காரைக்கால் மாவட்ட விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் மாவட்ட ஆட்சியரகம் அருகே ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. கோமாரி நோயால் காரைக்கால் மாவட்டத்தில் உயிரிழந்த கால்நடைகளுக்கு இழப்பீடாக ரூ.30 ஆயிரம் வழங்கவேண்டும். இந்த நோயால் பாதித்த கால்நடைகளுக்கு உரிய மருத்துவ சிகிச்சை அளிக்கவேண்டும். மாவட்டத்தின் தலைநகரிலும், பிற பகுதியிலும் இயங்கும் கால்நடை மருத்துவமனைகளில் கால்நடைகளுக்கான மருந்துகள் முழுமையாக இருப்பில் வைத்திருக்கவேணடும். ஏழை மக்கள் வாழ்வாதாரமாக பயன்படுத்தும் கால்நடைகளுக்கு இலவச காப்பீடு செய்யவேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் முன்வைத்து ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் கட்சியின் துணைப் பொதுச்செயலர் அரசு.வணங்காமுடி சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்டு உரையாற்றினார். மாவட்ட, தொகுதி நிலையில் உள்ள பல்வேறு பொறுப்பாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

விவசாய மலர்





சமவெளியில் முட்டைக்கோசு சாகுபடி

முட்டைக்கோசு நட்ட 80-வது நாள் முதல் அறுவடை. நடுவதாக இருந்தால் வீரிய ஒட்டு ரகம். பயிர் செய்தால் ஏக்கருக்கு 450 - 500 மூட்டைகள் (மூட்டை 90 கிலோ). ஏனைய உயர் விளைச்சல் ரகங்கள் ஏக்கர் ஒன்றுக்கு 50 -20 டன்கள்.

* அனைத்து மண் வகைகளிலும் சாகுபடி செய்வதற்கு ஏற்றது. இருப்பினும் முன் பருவ பயிர்களுக்கு வண்டல் மண் ஏற்றது.

* பின் பருவ பயிர்களுக்கு களிமண் ஏற்றது.

* பொதுவான சிறந்த வடிகால் உள்ள அனைத்து நிலங்களும் தேவைப்பட்டது.

* மண்ணின் கார, அமிலத் தன்மையானது 6 முதல் 6.5 வரை அவசியம்.

* இவைகள் உற்பத்திக்கு 15 முதல் 20 டிகிரி தட்ப, வெப்பம் தேவை. இதற்கு மேல் போனால் வளர்ச்சி தடைபடும்.

சாகுபடி: ரகங்களை மூன்று வகையாக பிரிக்கலாம்.

* முன்பருவ காலப்பயிர் - ஜுலை - ஆகஸ்ட் மாதங்கள் (கோல்டன் ஏக்கர், ஹரிராணிகோல், பிரைடு ஆஃப் இந்தியா, பூசா முக்தா, கேப்டன்சேகன், மார்கரெட் மற்றும் எக்ஸ்பிரஸ்)

* மிதவ பருவகால பயிர் - செப்டம்பர் (ரகங்கள் குளோரி ஆஃப் என் குசியன்)

* பின் பருவ காலப்பயிர் - அக்டோபர் - நவம்பர் மாதங்கள் (ரகங்கள் பூசா டிரம் ஹெட் மற்றும் லேட் லார்ஸ்டிரம் ஹெட்)

தனியார் நிறுவனங்கள் தயாரித்த ஒட்டு வீரிய ரகங்கள் ஆகும். விதையளவு 80 கிராம் / ஏக்கர்.

பிரபல ஸ்பிக் நிறுவனம் நாற்று விட்டு நட்டு இதர வழிமுறைகளை விவசாயிகள் நலனுக்காக தெளிவாக உதவி செய்கின்றது. இதுவொரு தொண்டு மனப்பான்மையில் தொடர்ந்து செய்து வருகின்றது. இடுபொருட்களை விலை கொடுத்து வாங்கலாம். இங்கு பணி செய்யும் அனுபவம் பெற்ற விஞ்ஞானிகள் உதவுகிறார்கள். பல சிறு விவசாயிகள் ஸ்பிக் நிறுவனம் அமைத்துள்ள நாற்றங்கால்களை நேரில் பார்த்து தரமான நாற்றுகள் தயார் ஆகி உள்ளது. தெரிந்து கொள்ளலாம். இங்கு பயிர்களுக்கு இயற்கை உரங்கள் தாராளமாக அளிக்கப்படுகின்றது. உரமிடுதல் நல்ல கவனத்தோடு பாசனம் செய்யப்படுகின்றது.

விவசாயிகள் கவனிக்க:

விஞ்ஞானியை அணுக வேண்டும். திரு.கூ.விஜயகுமார் டேவிட், மொபைல் நம்பர்: 94433 25788. இவர் உங்களது அனுபவத்தைத் தெரிந்து அதற்கேற்ற பயிற்சியை சிபாரிசு செய்வார். காலம் தாழ்த்தாமல் அவரை அணுகவும்.

எஸ்.எஸ்.நாகராஜன்,

விவசாய விஞ்ஞானி

டாஃபே, சென்னை.

**நெல்வயலில் வளர்க்கலாம் "அசோலா'**

நீர்நிலைகளில் மிதவை தாவரமாக வளரும் பெரணி வகையைச் சேர்ந்தது, "அசோலா'. இலைகளில் ஒட்டி வளரும். "அனபீனா' என்ற நீலபச்சை பாசி உதவியுடன், காற்று மண்டலத்தில் உள்ள தழைச்சத்தை உட்கிரகித்து, வளரும் தன்மையுடையது. நெற்பயிருக்கு சிறந்த உரமாகும். கால்நடைகள், கோழிகளுக்கு சிறந்த புரதச்சத்தாக இருப்பதால், தீவனச்செலவை கணிசமான அளவு குறைக்கும். இதில் 25 - 27 சதவீத புரதச்சத்து, 15 சதவீத நார்ச்சத்து, 3 சதவீத கொழுப்புச்சத்து, 45- 50 சதவீத மாவுச்சத்து மற்றும் தாதுஉப்புகள் உள்ளன. தாவர இலைகளில் காணப்படும் "டானின்' என்ற நச்சு, அசோலாவில் மிககுறைவாக இருப்பதால், மரபுசாரா தீவனப்பயிராக விளங்குகிறது.

ஒரு எக்டேர் நிலப்பரப்பில் எளியமுறையில், ஓராண்டில் 70 - 80 டன் உலர்தீவனத்தை உற்பத்தி செய்யலாம். இவற்றை பசுமையாகவோ, உலர்த்தியோ கொடுக்கலாம். ஒருகிலோவுக்கு 50 காசு என்ற அளவில் உற்பத்திச் செலவு இருக்கும்.

அசோலாவை, தொட்டிகளிலும், "சில்பாலின்' பைகளிலும் வளர்க்கலாம். இரண்டு மீட்டர் சதுர சிமென்ட் தொட்டிகளில் 10செ.மீ., அளவு நீர்நிரப்பி, 10 கிராம் சூப்பர் பாஸ்பேட், 20 கிராம் பசுஞ்சாணம் கலந்து, 400 கிராம் அசோலாவை தொட்டியில் இடவேண்டும். இரண்டு வாரத்திற்குள், இரண்டு முதல் மூன்று கிலோ வரை, மகசூல் கிடைக்கும்.

நிழற்பாங்கான இடத்தில் பத்தடி நீளம், இரண்டு அடி ஆழ, அகலத்தில் பாத்தி அமைக்கவும். பாத்தியின் அடித்தளத்தில் சில்பாலின் காகிதத்தை விரித்து, 2 செ.மீ., அளவிற்கு மண் இட்டு, 2 செ.மீ., அளவு தண்ணீர் ஊற்றவும். இதில் 100 கிராம் சூப்பர் பாஸ்பேட், 5 கிலோ பசுஞ்சாணம் கலந்து, அசோலா தாய் வித்து இரண்டு முதல் இரண்டரை கிலோ இட வேண்டும். தினம் காலை அல்லது மாலையில் பாத்தியில் உள்ள மண்ணை நன்கு கலக்கி விட்டால், மண்ணில் உள்ள சத்துக்கள் தண்ணீரில் கரைந்து, 15 நாட்களில், பாத்தியில் 30 முதல் 50 கிலோ அசோலா தயாராகி விடும்.

மூன்றில் ஒருபங்கை பாத்தியிலேயே விட்டு, மீதத்தை அறுவடை செய்யலாம். பத்து நாட்களுக்கு ஒருமுறை 5 கிலோ பசுஞ்சாணம் கரைப்பது நல்லது. பூச்சிதொல்லை வந்தால், ஒரு லிட்டர் தண்ணீரில் 5 மில்லி வேப்பெண்ணெய் கலந்து பாத்தியில் தெளிக்க வேண்டும்.

நெல்வயலில் நாற்று நட்ட ஒரு வாரத்தில், அசோலா தாய் வித்துக்களை தூவினால், நெல்லோடு கூடவே வளர்ந்து, மண்ணில் உள்ள நைட்ரஜனை நிலைநிறுத்தும். மண்ணோடு மட்கி, இயற்கை உரமாகவும் மாறும்.

மதுரை விவசாயக் கல்லூரியில் ஒரு கிலோ அசோலா ரூ.5க்கு கிடைக்கிறது. இதையே தாய் வித்தாக, விதைக்கலாம்.

கோபால், துறைத் தலைவர்,
ஜெபர்லின் பிரபினா, மெரினா பிரேம் குமாரி,
உதவி பேராசிரியைகள்,
மதுரை.
போன்:0452 - 242 2956.

**நவீன தொழில்நுட்பம்**

முந்திரியில் அதிக விளைச்சல் பெற: பொதுவாக முந்திரி 7x7 மீட்டர் இடைவெளியில் ஏக்கருக்கு 80 கன்றுகள் நடவு செய்யப்படுகிறது. புதிய தொழில்நுட்பமான அடர்நடவு முறையில் 5x4 மீட்டர் இடைவெளியில் 200 கன்றுகள் நடலாம். இவ்விரு முறைகளிலும் கிளைகளை கவாத்துசெய்தல் முக்கியம். நோய்வாய்ப்பட்ட கிளைகள், குறுக்கும் நெடுக்குமான கிளைகள் நீர்போத்துக்கள் ஆகியவற்றை நீக்க வேண்டும்.

கவாத்து: ஆகஸ்ட் மாதம் வரும் பூந்தளிர்களில் இருந்து டிசம்பர் மாதம் பூக்கள் மலரும். முந்திரி காய்ப்பு முடிந்தவுடன் ஜூன் அல்லது ஜூலை மாதங்களில் மூன்றாமடுக்கு கிளைகளை கவாத்து செய்துவிட வேண்டும். வெட்டுப்பட்ட காயங்களில் போர்டோ பசை அல்லது பைட்டலான் மருந்தைச் சுண்ணாம்பு பதத்தில் பூசிவிட வேண்டும்.

உரமிடுதல்: ஒரு மரத்திற்கு 1000:125:250 கிராம் தழை, மணி, சாம்பல் சத்து கலவையை 5 மற்றும் அதற்கு மேல் வயதுடைய மரங்களுக்கு மழை நாட்களில் அடியுரமாக கொடுக்க வேண்டும். சிறிய மரங்களுக்கு வயதுக்கு தகுந்தபடி உர அளவைக் குறைத்துக்கொள்ளுதல் வேண்டும். ஒரு வயது உரப்பரிந்துரையில் 5ல் ஒரு பகுதி 2 வயது, 5ல் 2 பகுதி என்பதுபோல் கணக்கிட வேண்டும்.

கவாத்துசெய்து 30 அல்லது 45 நாட்களுக்குள் புதிய இலைகளும் புதுத் தளிர்களும் நன்கு வளர்ந்திருக்கும். இந்த சமயத்தில் ஒரு மேலுரத் தெளிப்பு கொடுக்க வேண்டும். தழை, மணி, சாம்பல்சத்து 19:19:19 கலவையை (1 சதம்) மேலுரமாக தெளிக்க வேண்டும்.

இரண்டாம் மேலுரத் தெளிப்பு: பெரும்பாலான ரகங்களும் விதைக்கன்றுகளும் டிசம்பர்-ஜனவரி மாதங்களில் பூக்க தொடங்கும் வி.ஆர்.ஐ.3ரகம் டிசம்பர் முதல் வாரத்திலேயே பூக்கத் தொடங்கிவிடும். வீரிய ஒட்டு ரகமான வி.ஆர்.ஐ. (முந்திரி) எச்.1, டிசம்பர் கடைசி வாரம் பூக்கத் தொடங்கும். பூங்கொத்துக்கள் தோன்றியவுடன் இரண்டாம் தெளிப்பாக மோனோ அம்மோனியம் பாஸ்பேட் ஒரு சத மேலுரக் கலவையை போரான் நுண்ணூட்டச் சத்துடன் (0.1%) கலந்து தெளிக்க வேண்டும். இந்த பருவத்தில் தேயிலைக்கொசு, இலை சுருட்டுப்புழு தாக்குதல் அதிகம் காணப்படலாம். அவ்வாறு இருந்தால் புரோபனோபாஸ் மருந்தை 0.1 சதம் கலந்து தெளிக்கலாம்.

மூன்றாம் மேலுரத் தெளிப்பு: முந்திரியில் மண், மரத்திலுள்ள சத்துக்களைப் பொறுத்தே பூ, காய் பிடிப்புத்திறன் வேறுபடுகிறது. முந்திரி ஒரு மானாவாரிப்பயிராக இருப்பினும் அனைத்துவகை மண்ணிலும் வளரக்கூடிய பயிராக இருப்பினும் சரியான நீர்ப்பாசனமும் உர நிர்வாகமும் செய்யப்பட்ட தோப்பில் அதிகமான விளைச்சலைத் தரக்கூடியது.

எனவே காய்பிடிப்பு தொடங்கியவுடன் த.வே.ப.கழக பஞ்சகாவியம் கரைசலை (3 சதம்) மேலுரமாகத் தெளிப்பது நல்லது. இது ஒரு பூச்சி விரட்டியாகவும் பயன்படுகிறது.இவ்வாறு முந்திரி மரங்களை நட்ட 6 மாதம் முதலே கவாத்து முறைகளைச் சரியாகக் கையாள்வதால் புதிய பூக்கும் கிளைகளை உந்தமுடியும். மேலுரத் தெளிப்பான் மருந்துகளைத் தெளிப் பதன் மூலம் பூக்கும் திறன், காய் பிடிப்புத்திறன், முந்திரிக்கொட்டை வளர்ச்சி, விளைச்சல், பருப்பின் தரம் ஆகியவற்றை அதிகரிக்கலாம். இந்த கவாத்து, மேலுரத் தெளிப்பு தொழில்நுட்பத்தின்மூலம் 30 முதல் 40 சதம் அதிக விளைச்சலைப் பெறலாம். ஏக்கருக்கு ரூ.11,000 கூடுதல் வருமானமும் கிடைக்கும். (தகவல்: முனைவர் எம்.எஸ்.அனீசாராணி, எஸ்.ஜீவா, ரா.கீ.புருஷோத்தமன், பேராசிரியர் மற்றும் தலைவர், மண்டலஆராய்ச்சி நிலையம், விருத்தாசலம்-606 001, கூடலூர் மாவட்டம். 04143-238 231)

-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.

### மணிப்பூர் மிளகாய் 1 கிலோ ரூ.60 ஆயிரம்

சாதாரணமாக, 1 கிலோ மிளகாய், 60 ரூபாய் முதல், 150 ரூபாய் வரை விற்கப்படும் நிலையில், மணிப்பூர் விவசாயி உற்பத்தி செய்யும் மிளகாய், 1 கிலோ, 60 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனையாகிறது.

மணிப்பூர் மாநிலத்தை சேர்ந்த, இளம் விவசாயி, யம்பூம் இபோஹான்பி சிங், 36. இவர், தன் முயற்சியால், உலக அளவில் பிரசித்தி பெற்றுள்ளார். விவசாயத்தில் ஆர்வம் உடைய இவர், தன் சொந்த நிலத்தில், உலக அளவில் பிரசித்தி பெற்ற, 'யூ - மொரோக்' வகை மிளகாய் செடிகளை வளர்த்து வருகிறார். இந்த மிளகாய் செடிகள், ஒவ்வொன்றும், பத்து முதல், 12 அடி உயரம் வளரக் கூடியவை. அதிக காரத்தன்மை கொண்டுள்ளதால், உலகின், இரண்டாவது அதிக காரம் கொண்ட

மிளகாயாக, இவை விளங்குகிறது. ஒரு செடியில், நூறு மிளகாய்களுக்கு மேல் காய்க்கும். மணிப்பூர் மாநில தட்பவெட்ப நிலை, இவ்வகை மிளகாய் விளைச்சலுக்கு உகந்ததாக உள்ளது. இந்த மிளகாய்க்கு ஜப்பான், சீனா போன்ற நாடுகளில் நல்ல வரவேற்பு உள்ளது. ஒரு கிலோ, 50 ஆயிரம் முதல், 60 ஆயிரம் ரூபாய் வரை விலை போகிறது. இதனால், பல லட்ச ரூபாயை இவர், லாபமாக சம்பாதித்து வருகிறார்.

## கேரளாவில் கோமாரி நோய்: பால் உற்பத்தி பாதிப்பு

திருவனந்தபுரம்: கேரளாவில், 33 ஆயிரம் கறவை மாடுகள், கோமாரி நோயால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. இதனால், அங்கு, பால் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதாக, தகவல் வெளியாகி உள்ளது.
கேரள மாநில கால்நடைத் துறை இயக்குனர், என்.என்.சசி கூறியதாவது: கேரளாவில், சமீபகாலமாக, கால்நடைகளை தாக்கும் கோமாரி நோய் பரவி வருகிறது. இந்த நோய்க்கு, இதுவரை, 2,800 கால்நடைகள் இறந்துள்ளன. 33 ஆயிரம் கறவை மாடுகள், கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. இதனால், மாநிலம் முழுவதும், பாலுக்கு, கடும் தட்டுபாடு ஏற்பட்டுள்ளது. கோட்டயம், திருச்சூர், பாலக்காடு ஆகிய மாவட்டங்களில், இந்த நோயின் தாக்கம் அதிகமாக உள்ளது. நோய் பரவுவதை தடுக்க, மாநில அரசு, தீவிர நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. கோமாரி நோய், ஆடு, மாடு ஆகியவற்றை அதிகமாக தாக்கும். ஆனால், தற்போது, இந்த நோயால், யானைகளும் பாதிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு, அவர் கூறினார்.

## பயிர் காப்பீடு திட்டத்தில் சேர விவசாயிகள்...தயக்கம்! தெளிவான வழிகாட்டுதல் இன்றி குழப்பம்



கடலூர்:மத்திய அரசு செயல்படுத்தி வரும் வேளாண் பயிர் காப்பீடு திட்டம் குறித்து தெளிவான வழிகாட்டுதல் இல்லாததால், பயிர் காப்பீடு செய்வதில் விவசாயிகளின் ஆர்வம் குறைந்து வருகிறது.

விவசாய பயிர்கள் நோய் மற்றும் இயற்கை சீற்றங்களால் பாதிக்கப்பட்டு மகசூல் குறைவதால் விவசாயிகள் பெரும் நஷ்டத்திற்கு ஆளாகி வருகின்றனர். இதனைத் தவிர்க்கும் பொருட்டு மத்திய அரசு, வேளாண் பயிர் காப்பீடு திட்டத்தை கடந்த 2000ம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டத்தில் ஒவ்வொரு பயிருக்கும், காப்பீடு தொகை மத்திய அரசு நிர்ணயம் செய்துள்ளது. அதில் 15 சதவீத தொகையை பிரீமியத் தொகை கட்ட வேண்டும். அதில் 6 சதவீதத்தை மட்டும் விவசாயிகள் கட்ட வேண்டும். மீதமுள்ள 9 சதவீதத்தை மத்திய அரசு செலுத்தி வருகிறது. இதில் வங்கிகளில் பயிர்க் கடன் பெறும் விவசாயிகளிடம், வங்கிகளே காப்பீடு தொகை பிடித்தம் செய்து கொள்கிறது.

கடன் பெறாத விவசாயிகள், தாங்களே நேரடியாக வங்கிகளில் காப்பீட்டு தொகை செலுத்த வேண்டும். இவ்வாறு காப்பீடு செய்யும் பயிர்களை, அறுவடை காலத்தில் மகசூலை அளவீடு செய்து, சராசரி மகசூலை விட குறைவாக இருந்தால், அந்த குறைந்த அளவிற்கு ஏற்ப இழப்பீடு தொகை வழங்கப்படும்.

இந்த மகசூல் மதிப்பீடு மற்றும் இழப்பீடு வழங்குவது துவக்கத்தில் மாவட்ட அளவிலும், பின்னர் தாலுகா, வட்டாரம், குறுவட்டம் என இருப்பது வரும் ஜனவரி மாதம் முதல் கிராம அளவில் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

இத்திட்டத்தில் பயிர் மகசூல் மதிப்பீடு செய்வதற்காக மணிலாவிற்கு தற்போது குறுவட்டத்திற்கு 8 வயல்களும், பிற பயிர்களுக்கு 4 வயல்கள் தேர்வு செய்யப்படுகிறது. வேளாண், வருவாய் மற்றும் புள்ளியியல் துறை அதிகாரிகள் முன்னிலையில் மகசூல் கணக்கிடப்படுகிறது.

இந்த வயலில் மகசூல் சராசரி அளவைவிட குறைவாக இருந்தால் மட்டுமே,

குறைவு ஏற்பட்ட அளவிற்கு இழப்பீடு அந்த குறுவட்டத்தில் காப்பீடு செய்த விவசாயிகளுக்கு வழங்கப்படும். அதுவும் ஓராண்டிற்கு பிறகே வழங்கும் நிலை உள்ளது. தேர்வு செய்யப்பட்ட வயலில் மகசூல் அதிகமாக இருந்து, அதே குறுவட்டத்தில் பிற வயல்களில் மகசூல் குறைந்தால் இழப்பீடு கிடைக்காது. துவக்கத்தில் விவசாயிகளிடம் நல்ல வரவேற்பை பெற்ற இத்திட்டம் குறித்து தெளிவான வழிகாட்டுதல் இல்லாததாலும், இழப்பீடு கணக்கீடு செய்ய மாதிரி வயல் தேர்வு முறை மற்றும் இழப்பீடு வழங்க கால தாமதமாவதால் பயிர் காப்பீடு செய்வது விவசாயிகளிடையே ஆர்வம் குறைந்து வருகிறது. கடந்தாண்டு கடலூர் மாவட்டத்தில் சம்பா பருவத்திற்கு பயிர்க் கடன் பெறாத 24 ஆயிரத்து 34 விவசாயிகள் தங்கள் பயிர்களை காப்பீடு செய்தனர். கடந்தாண்டு மாவட்டத்தில் நிலவிய வறட்சியால் பெரும்பாலான பகுதிகளில் மகசூல் பாதித்தது.
ஆனால், மாதிரி வயல்களில் மகசூல் குறையவில்லை என காப்பீட்டு நிறுவனம் கூறி வருவதாலும், மகசூல் குறைந்த பகுதி விவசாயிகளுக்கான இழப்பீட்டு தொகை ஓராண்டாகியும் இதுவரை வழங்காத நிலை உள்ளதால், இத்திட்டத்தில் சேர விவசாயிகள் ஆர்வமின்றி உள்ளனர். இதனால், இந்தாண்டு பயிர் காப்பீடு செய்வதற்கு வரும் 31ம் தேதி கடைசி நாள் என்ற போதிலும், இதுவரை மாவட்டத்தில் கடன் பெறாத விவசாயிகள் 7,736 பேர் மட்டுமே காப்பீடு செய்துள்ளனர்.

### மேட்டூர் அணை நீர்மட்டம்: 17 நாளில் 7 டி.எம்.சி., சரிவு

மேட்டூர்: நீர்வரத்து குறைந்ததால், மேட்டூர் அணை நீர் இருப்பு, கடந்த, 17 நாட்களில், 7 டி.எம்.சி., சரிந்துள்ளது. மேட்டூர் அணையின் நீர்மட்டம், கடந்த, 1ம் தேதி, 85 அடியாகவும், நீர் இருப்பு, 47 டி.எம்.சி.,யாகவும் இருந்தது. வினாடிக்கு, 3,000 கன அடியாக இருந்த மேட்டூர் அணை டெல்டா நீர்திறப்பு, கடந்த, 9ம் தேதி முதல், வினாடிக்கு, 9,000 கனஅடியாக அதிகரிக்கப்பட்டது. இதை அடுத்து, அணையின் நீர்மட்டம் சரிந்து வருகிறது. அணையின் நீர்மட்டம், 78 அடியாகவும்,

நீர் இருப்பு, 40 டி.எம்.சி.,யாகவும் நேற்று இருந்தது. கடந்த, 17 நாட்களில், அணையின் நீர்மட்டம் ஏழு அடியும், நீர் இருப்பு, 7 டி.எம்.சி.,யும் சரிந்துள்ளது.

மேட்டூர் அணை நீர்மட்டம்

நீர்மட்டம் : 78 அடி

நீர் இருப்பு : 40 டி.எம்.சி.,

நீர்வரத்து : 1,136 கனஅடி

திறப்பு : 9,000 கனஅடி

**தானிய சாகுபடி பரப்பளவு507 லட்சம் ஹெக்டேராக உயர்வு**



புதுடில்லி:நடப்பு டிசம்பர், 13ம் தேதி நிலவரப்படி, ரபி பருவத்தில் பயிரிடப்பட்ட உணவு தானியங்களின் பரப்பளவு, 507 லட்சம் ஹெக்டேராக உயர்ந்துள்ளது. இது, சென்ற ஆண்டு, இதே காலத்தில், 278 லட்சம் ஹெக்டேராக இருந்தது.நடப்பாண்டு ரபி பருவத்தில், கோதுமை பயிரிடும் பரப்பளவு, 254 லட்சம் ஹெக்டேராக உயர்ந்துள்ளது. இது சென்ற ஆண்டு, இதே காலத்தில், 228 லட்சம் ஹெக்டேராக இருந்தது. இதே காலத்தில், பருப்பு வகைகளின் பயிர் பரப்பளவு, 120 லட்சத்தில் இருந்து, 124 லட்சம் ஹெக்டேராகஉயர்ந்துள்ளது. எண்ணெய் வித்துக்கள் பயிரிடும் பரப்பளவு, 76 லட்சத்தில் இருந்து, 78 லட்சம் ஹெக்டேராக அதிகரித்துள்ளது. நெல் பயிரிடும் பரப்பளவு, 1.42 லட்சத்தில் இருந்து, 1.63 லட்சம் ஹெக்டேராக உயர்ந்துள்ளது. அதே சமயம், இதே காலத்தில், இதர தானியங்களின் பயிர் பரப்பளவு, 53.05 லட்சத்தில் இருந்து, 50.23 லட்சம் ஹெக்டேராக குறைந்துள்ளது என, மத்திய வேளாண் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**விளைச்சல் குறைந்ததால் செங்கரும்பு விலை இருமடங்கு உயர்வு : பொங்கல் பண்டிகை இனிக்குமா?**



தமிழகத்தில், செங்கரும்பு விளைச்சல் குறைந்துள்ளதால், விலை, இருமடங்கு உயர்ந்துள்ளது. தமிழகத்தில், கடந்த ஆண்டு, தென்மேற்கு பருவமழை மற்றும் வடகிழக்கு பருவ மழை, எதிர்பார்த்த அளவுக்கு பெய்யாததால், கடும் வறட்சி நிலவியது. செங்கரும்பு அதிக அளவில் பயிரிடப்படும், பல மாவட்டங்களில், நீர் நிலைகளில் போதிய அளவு தண்ணீர் இல்லாததால், செங்கரும்பு பயிரிடுவது குறைந்து, முந்தைய ஆண்டை விட, 50 சதவீதம், விளைச்சல் குறைந்தது. சேலம் மாவட்டத்தில், வாழப்பாடி உட்பட, சில பகுதிகளில், பொங்கல் பண்டிகைக்கு விற்பனைக்கு வரும் வகையில், செங்கரும்பு பயிரிடப்படுவது வழக்கம். கடந்த ஆண்டு நிலவிய வறட்சியால், குறைந்த அளவிலேயே செங்கரும்பு பயிரிடப்பட்டது; தற்போது அந்தக் கரும்புகள் வெட்டும் பருவத்தில் உள்ளன. வழக்கமாக, சேலம் பகுதிகளில் விளையும் செங்கரும்புகளை, பெங்களூரு, மதுரை, திருநெல்வேலி மற்றும் சென்னை வியாபாரிகளே, பொங்கல் பண்டிகை விற்பனைக்கு வாங்கிச் செல்வர். இந்த ஆண்டு, செங்கரும்பின் விலை உயர்ந்ததால், வியாபாரிகள், கரும்பு வாங்க தயக்கம் காட்டி வருகின்றனர். இதனால், வெளியூர் வியாபாரிகளின் வருகையை எதிர்பார்த்து, விவசாயிகளும், கரும்புகளை வெட்டாமல் காத்திருக்கின்றனர்.

கடந்த ஆண்டு, டிசம்பர் கடைசி வாரத்தில், முதல் ரக செங்கரும்பு ஒன்று, 15 ரூபாய்க்கும், இரண்டாம் ரகம், 10; 20 கரும்புகளையுடைய கட்டு, முதல் ரகம், 300, இரண்டாம் ரகம், 200 ரூபாய்; 30 கட்டுக்கள் உடைய, ஒரு லோடு கரும்பு, 5,000 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது. அதுவே தற்போது, முதல் ரகம், 30, இரண்டாம் ரகம், 20 ரூபாய், கட்டு முதல் ரகம், 600 ரூபாய், இரண்டாம் ரகம், 400 ரூபாய், லோடு கரும்பு, 10 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது. பொங்கல் பண்டிகை நெருங்கும் நிலையில், இந்த விலை மேலும் உயரும் என்றும், விவசாயிகள் கூறுகின்றனர். இது தொடர்பாக, செங்கரும்பு மொத்த வியாபாரி ஒருவர் கூறியதாவது: கடந்த ஆண்டு, பொங்கல் பண்டிகையின் போது, சேலம் மாவட்டத்தில், அதிக அளவில் செங்கரும்பு விளைச்சல் இருந்ததால், பெங்களூரு, சென்னை வியாபாரிகளின் வருகை அதிகரித்தது. டிசம்பர் மூன்றாவது வாரமே, கரும்புகளை வெட்டுவது துவங்கியது. ஆனால், நடப்பாண்டு விளைச்சல் குறைந்து, விலை உயர்ந்துள்ளதால், வெளியூர் வியாபாரிகளின் வருகை, எதிர்பார்த்த அளவுக்கு இல்லை. தற்போது, 30 ரூபாய்க்கு விற்கப்படும் செங்கரும்பு, பொங்கல் பண்டிகைக்கு ஒரு வாரத்துக்கு முன், 50 ரூபாய்க்கு விற்றாலும் ஆச்சர்யமில்லை. இவ்வாறு, அந்த வியாபாரி கூறினார்.நமது நிருபர்

**கோமாரி நோய் தடுப்பு**

கடையநல்லூர்: கடையநல்லூர் பகுதியில் கோமாரி நோய் தடுப்பு சிறப்பு மருத்துவ முகாம் நடந்தது.கடையநல்லூர், காசிதர்மம், முத்துசாமியாபுரம், புன்னையாபுரம், கிருஷ்ணாபுரம், புதுக்குடி, கம்பனேரி உள்ளிட்டசுற்றுப்பகுதிகளில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் பரவியது. இதனையடுத்து சிறப்பு முகாம் நடத்துவதற்கான ஏற்பாடுகளை கால்நடைத்துறையினர் மேற்கொண்டனர்.கடையநல்லூர் யூனியன் பகுதியில் உள்ள கிராமங்கள் மற்றும்

நகராட்சி பகுதிகளில் மழைக்காலங்களில் கால்நடைகளுக்கு ஏற்படும் கோமாரி நோய் மற்றும் பிற நோய்கள் பரவாமல் தடுப்பதற்கான சிறப்பு மருத்துவமில் விவசாயிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டது.கால்நடை கொட்டில்களை கிருமி நாசினியான பிளிச்சிங் பவுடர் அல்லது 4 சதவீதம் சோடியம் கார்பனேட், அல்லது பார்மலின் கொண்டுசுத்தம் செய்ய வேண்டும். கொட்டகையைசுற்றிசுண்ணாம்பு பொடி போட வேண்டும், புதிதாக கால்நடை வாங்குவதோ, விற்பதோ கூடாது என்பது பற்றி சிறப்பு முகாமில் எடுத்துக்கூறப்பட்டது. கோமாரி நோய் அறிகுறிகள் தென்பட்டால் அருகில் உள்ள கால்நடை டாக்டரிடம் தெரிவிக்கவும் அறிவுறுத்தப்பட்டது.மாதம் இருமுறை கால்நடை உதவி டாக்டர் உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் கிராம நிர்வாக அதிகாரிகள் கொண்ட சிறப்பு விழிப்புணர்வு கூட்டம் நடத்தப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது.முகாமில் கால்நடைகளுக்கு சிகிச்சையும் மேற்கொள்ளப்பட்டது.

**வேளாண் பணிகள் திட்டமிடுதல் கூட்டம்**

புதூர்: தூத்துக்குடி மாவட்டம் வாகைக்குளம் ஸ்காட் வேளாண் அறிவியல் மையத்தில் வேளாண் பணிகள் திட்டமிடுதல் கூட்டம் நடந்தது.தூத்துக்குடி மாவட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 1,75,000 ஹெக்டேர் நிலப்பரப்பில் வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்கள் பயிரிடப்பட்டு வருகிறது. நெல், வாழை, பயிறுவகை பயிர்கள் சிறுதானியங்கள் ஆகியவைகள் பிரதான பயிர்கள் ஆகும். மேலும் மானாவாரி பயிர்கள் பெரும் பரப்பளவில் பயிரிடப்பட்டு வருகிறது. இப்பயிர்களில் உற்பத்தி திறனை அதிகரிப்பதற்காக அரசு துறைகள் மற்றும் ஸ்காட் வேளாண் அறிவியல் மையம் முயற்சி எடுத்து வருகிறது. தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 2014-15 ஆண்டில் செயல் படுத்தபட வேண்டிய முன் திட்ட வரைவு தயாரிப்பு கூட்டம் ஸ்காட் வேளாண் அறிவியல் மையத்தில் சிறப்பு கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு வேளாண் துணை இயக்குநர் பொன்காத்த

பெருமாள் தலைமை வகித்தார். ஸ்காட் வேளாண் அறிவியல் மையத்தில் திட்ட ஒருங்கிணைப்பாளர் அழகுகண்ணன், வேளாண் உதவி இயக்குநர்கள் ஸ்காட் வேளாண் அறிவியல் மைய் தொழில் நுட்ப வல்லுநர்கள் அசோக் குமார், முருகன் மற்றும் பல்வேறு பகுதிகளை சார்ந்த விவசாயிகள் குழு தலைவர்கள் கலந்து கொண்டனர். சிறுதானியங்கள் பயிறு வகை பயிர்கள் மற்றும் மானாவாரியில் தோட்டக்கலை பயிர்கள் சாகுபடியில் விவசாயிகள் கடைப்பிடிக்க வேண்டிய சிறப்பு தொழில் நுட்பங்கள் பற்றி விரிவாக விவாதிக்கப்பட்டது. இக்கூட்டத்தின் முடிவில் பண்ணை குட்டைகள் அமைத்தல், விதை நேர்த்தி மற்றும் விதை கடினப்படுத்துதல், ஒருங்கிணைந்த பண்ணையம், மானாவாரியில் பழ பயிர்கள் சாகுபடியில் பின்பற்ற வேண்டிய தொழில் நுட்பங்கள் உள்ளடக்கிய கருத்துகளை தமிழக அரசுக்கு சமர்ப்பிக்கும் வண்ணம் தயாரிக்கப்பட்டது.

**ஒரு சொட்டு நீர் கூட தேங்காத குளம் தொரவலூர் விவசாயிகள் வேதனை**

திருப்பூர்:கருவேல மரங்களும், முட்புதர்களும் அடர்ந்து வனப்பகுதி போல், காணப்படும் தொரவலூர் குளம் மற்றும் நீர் வரத்துள்ள பாதைகளை தூர் வாரினால், குளத்துக்கு தண்ணீர் வரும், வாய்ப்புள்ளது.

திருப்பூர் அருகே தொரவலூர் மற்றும் மேற்குபதி ஊராட்சிகளுக்கு உட்பட்ட தொரவலூர் குளம் உள்ளது. 60 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள குளத்துக்கு, மேற்குபதி, தைலாம்பாளையம் உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட கிராமங்களில் பெய்யும் மழை நீரும், செட்டிபாளையம், ஒழலக்கோவில் உள்ளிட்ட ஈரோடு மாவட்ட கிராமங்களில் பெய்யும் மழை நீரும் வந்து குளத்தில் சேரும்; குளம் நிரம்பினால், ஆதியூர் வழியாக சென்று, நல்லாற்றில் கலக்கும்.

குளத்தில் நீர் தேங்கினால், நூற்றுக்கணக்கான ஏக்கருக்கும் மேற்பட்ட விவசாய நிலங்கள், சுற்றுப்புற கிராமங்களுக்கு குடிநீர் ஆதாரமும் ஏற்படும். மேலும், குளத்தை சுற்றியுள்ள 10 கி.மீ., தூரத்துக்கு, சிறு ஓடைகள் வழியாக நீர் வரத்தும்

காணப்படும். மேற்கண்ட பகுதிகளில் கனமழை பெய்தும் கூட, இதுவரை குளத்திற்கு ஒரு சொட்டு நீர் வரவில்லை, என இப்பகுதி விவசாயிள் ஆதங்கப்படுகின்றனர். நீர் வரத்து பாதை முழுவதும் முட்செடிகள் முளைத்து, புதராக காட்சியளிக்கின்றன. அதே போல், குளம் முழுவதும், கருவேல மரங்கள், முட்செடிகள் வளர்ந்து, அடர்ந்த வனப்பகுதி போல் காட்சியளிக்கிறது. இதனால், தண்ணீர் தேங்க முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது. விவசாயிகள் கூறிய தாவது: சில ஆண்டுகளுக்கு முன் வரை, குளத்துக்கு நீர் வரத்தும், ஆண்டு முழுவதும் தண்ணீர் தேங்கியும் காணப்பட்டது. நீர் வரத்து பாதை பல இடங்களில் மறிக்கப்பட்டதால், குளத்துக்கு நீர் வரத்து இல்லை; 10 கி.மீ., சுற்றளவில் மழை பெய்தால், ஓரிரு நாட்களில் குளம் நிரம்பி விடும். ஆனால், மழை பெய்தும், தண்ணீர் வரவில்லை. தொரவலூரை சுற்றியுள்ள கிராமங்களுக்கு நிலத்தடி நீர் மட்ட ஆதாரமாகவும், குடிநீர் ஆதாரமாகவும் உள்ள குளத்தின் நீர் வரத்து பாதை மற்றும் குளத்தையும் தூர் வர பொதுப்பணித்துறை அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும், என்றனர்.

### ஒரு குவிண்டால் நெல்லுக்கு ரூ.5,000 வழங்கணும்: நம்மாழ்வார் கோரிக்கை

திருத்துறைப்பூண்டி: "நெல் குவிண்டால் ஒன்றுக்கு ஐந்தாயிரம் ரூபாய் விலை நிர்ணயித்து, விவசாயிகளுக்கு அரசு வழங்க வேண்டும்' என, இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் கோரிக்கை விடுத்துள்ளார். திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி அருகேயுள்ள மேட்டுப்பாளையத்தில் இந்திய ஜனநாயக வாலிபர் சங்க மாவட்ட அரசியல் பயிற்சி முகாம் நடந்தது. இதில், இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் பங்கேற்றார். அப்போது, நிருபர்களிடம் அவர் கூறியதாவது: தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்டங்களில் சம்பா பருவ நெல் அறுவடைக்கு தயாராக உள்ளது. ஆனால், நெல்லை அரசு கொள்முதல் செய்யுமா? என, அச்சம் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது. இதை போக்க வேண்டும். விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு உரிய விலை கிடைக்க வேண்டும்.

நெல் குவிண்டால் ஒன்றுக்கு ஐந்தாயிரம் ரூபாய் நிர்ணயித்து, அரசு வழங்க வேண்டும். அப்போதுதான், விவசாயிகள் வாழ்க்கைத்தரம் உயரும். தமிழகத்தில், 43 சதவீத குழந்தைகளுக்கு சத்தான உணவு கிடைக்கவில்லை. பயிர்களுக்கு தெளிக்கப்படும் எண்டோசல்பான் பூச்சிமருந்து அறிமுகப்படுத்தி, 40 ஆண்டுகளில் பலர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இனிவரும் காலத்தில் பூச்சிக்கொல்லி மருந்துகளை தவிர்த்து, இயற்கை வேளாண்மை முறையை விவசாயிகள் மேற்கொள்ள வேண்டும். இதன்மூலம் மண்வளம் பாதுகாத்து, மக்களுக்கும் நஞ்சில்லாத உணவு கிடைக்கும். கேரளாவில், அரசு தோட்டத்தில் எண்டோசல்பான் மருந்து அடித்ததில், 1,300 ஏக்கர் நிலம் பாதித்தது. திருவாரூர் மாவட்டத்தில், குருடாயில் எடுப்பதால் விவசாயம், நிலத்தடிநீர் பாதித்துள்ளது. இவ்வாறு, அவர் கூறினார். பேட்டியின்போது, நமது நெல்லை காப்போம் மாநில ஒருங்கிணைப்பாளர் ஜெயராமன் மற்றும் பலர் உடனிருந்தனர்.

**சர்க்கரை ஆலையின் பிரச்னையால் கரும்பு விவசாயிகள்...மாற்று திட்டம்:சொந்தமாக வெல்லம் தயாரிப்பு பணிகளில் தீவிரம்**

ஆர்.கே.பேட்டை:கரும்பு வெட்டுக்கூலி, லாரி வாடகை, சர்க்கரை ஆலையில் நீண்டநாள் காத்திருப்பு போன்ற பிரச்னைகளால், ஆர்.கே.பேட்டை பகுதி கரும்பு விவசாயிகள், சொந்தமாக வெல்லம் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.ஆர்.கே.பேட்டை, பள்ளிப்பட்டு மற்றும் திருத்தணி ஒன்றிய பகுதிகளில், 2,700 ஏக்கர் பரப்பளவில், கரும்பு பயிரிடப்பட்டுள்ளது. ஒரு ஏக்கருக்கு, 40 டன் வரையில் கரும்பு விளையும். ஒரு டன் கரும்பின் கொள்முதல் விலை, 2,250 ரூபாய்.

கரும்பு வெட்டு கூலி:கரும்பு வெட்டும் பணிக்கு, ஆந்திர மாநிலத்தில் இருந்து, ஒப்பந்த தொழிலாளர்கள் வரவழைக்கப்படுகின்றனர். அவர்களுக்கு, சாப்பாடு, கூலி, தினசரி படி உட்பட, டன்னுக்கு, சராசரியாக 500 ரூபாய் செலவிடப்படுகிறது.மேலும், சர்க்கரை ஆலையில், நாள்கணக்கில், வெட்டிய கரும்புடன், காத்திருப்பதால், கரும்பில் ஈரப்பதம் குறைந்து, கணிசமான அளவு, எடை இழப்பும் ஏற்படுகிறது. இதனால், ஆர்.கே.பேட்டை, பள்ளிப்பட்டு,

திருத்தணி ஒன்றியங்களில், 300 விவசாயிகள், சொந்தமாக கரும்பு சாறு பிழிந்து, வெல்லம் தயாரிப்பதில் ஆர்வம் காட்ட துவங்கியுள்ளனர்.ஈரப்பதம் கவலையில்லை:50 கிலோ எடை கொண்ட ஒரு மூட்டை கறுப்பு வெல்லம், 1,300 ரூபாய்க்கு விற்பனை ஆகிறது. இதில், துாய வெல்லம், 1,600 ரூபாய்க்கு விற்பனை ஆகிறது. இருப்பு வைத்து விற்பனை செய்தால், மேலும் விலை உயரவும் வாய்ப்பு உள்ளது.

வெல்லம் தயாரிப்பில் ஈடுபடும் விவசாயிகள், தங்கள் நிலத்தில் விளைந்த கரும்பை, தாங்களே, தேவையான அளவு வெட்டி எடுக்கின்றனர்.மேலும், கரும்பு அரவைக்காக காத்திருப்பதில்லை என்பதால், ஈரப்பதம் குறைவதற்கு வாய்ப்பு இல்லை.

இது குறித்து, வேலன்கண்டிகை கரும்பு விவசாயி முருகேசன் கூறுகையில், "கரும்பு வெட்டு கூலி, லாரி வாடகை மற்றும் விவசாய செலவுகள், நோய் தாக்குதல், என, கணக்கிட்டால், பாடுபடும் விவசாயிக்கு, மிக சொற்ப அளவில் தான் லாபம் கிடைக்கும். சர்க்கரை ஆலைக்கு கரும்பு அனுப்புவதை விட, வெல்லம் தயாரிப்பில், நல்ல லாபம் கிடைக்கிறது. மேலும், சர்க்கரை ஆலையால் ஏற்படும் பிரச்னைகளும் இல்லை," என்றார்.மேலும், "ஒரு ஏக்கர் நிலத்தில் விளையும் கரும்பை, சர்க்கரை ஆலைக்கு அனுப்பினால், வெட்டு கூலி, லாரி வாடகை போக, 42,500 - 70 ஆயிரம் ரூபாய் லாபம் கிடைக்கும். அதே, அளவு கரும்பில் வெல்லம் தயாரித்தால், 80 ஆயிரம் - 1.20 லட்சம் ரூபாய் வரை லாபம் கிடைக்க வாய்ப்பு உள்ளது," என்றார்.

## 20ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

திருவள்ளூர்:திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம், வரும், 20ம் தேதி, வெள்ளிக்கிழமை காலை, 10:00 மணிக்கு, மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில், நடைபெற உள்ளது.அப்போது, மாவட்டத்தில் உள்ள வேளாண்மை, தோட்டக்கலை, வருவாய், மின்வாரியம், கூட்டுறவு, பொதுப்பணி, வேளாண்மைப் பொறியியல், மீன்வளம், கால்நடை பராமரிப்பு, வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை உள்ளிட்ட, பல்வேறு அரசு துறை அலுவலர்கள்

கலந்து கொண்டு, விவசாயிகள் குறைகளுக்கு தீர்வு காண உள்ளனர்.எனவே, திருவள்ளூர் மாவட்டத்தைச் சார்ந்த விவசாயிகள், மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்டு பயன் பெற வேண்டுமாறு, ஆட்சியர் வீர ராகவ ராவ் கேட்டுக் கொண்டுள்ளார்.

**மக்காச் சோளம் விளைச்சல் வடபொன்பரப்பியில் அமோகம்**

மூங்கில்துறைப்பட்டு:மூங்கில்துறைப்பட்டு அடுத்த வடபொன்பரப்பி யில் ஆற்றுப் பாலம் அருகே உள்ள விவசாய நிலத்தில் மக்காச்சோளம் பூத்துகுலுங்குகிறது. கடந்த ஆண்டு சரியான முறையில் மழை பெய்யாதால் விவசாயிகள் பாதித்தனர். இதனால் மன உளைச்சலுக்கு ஆளான விவசாயிகள் சில மாதத்துக்கு முன்பு பெய்த மழையால் சிறிது நிம்மதி அடைந்தனர். இதன் மூலம் விவசாயிகள் உளுந்து, கடலை, நெல், பருத்தி, மக்காச்சோளத்தை பேயிரிட்டனர். தற்போது நெல் மற்றும் உளுந்து அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது. பருத்தி மற்றும் மக்காச் சோளம் செழித்து வளர்ந்துள்ளது. இவைகள் அடுத்த மாதம் அறுவடைக்கு தயாராகி விடும் என்று விவசாயிகள் கூறினர்.

**மானாவாரி நிலங்கள் கரம்பாகியது நஞ்சை நிலங்களில் தானிய பயிர்**

திருக்கோவிலூர்:பருவமழை பொய்த்ததால் நஞ்சை நிலங்களில் புஞ்சை பயிர் செய்ய விவசாயிகள் தயாராகி வருகின்றனர்.

திருக்கோவிலூர் தென்பெண்ணை ஆற்றையொட்டியுள்ள விவசாய நிலங்களில் நெல், கரும்பு, வாழை என முப்போக சாகுபடி நடக்கும். வடகிழக்கு பருவ மழையின் போது ஏரி குளங்கள் நிரம்பும்.

சம்பா அறுவடை பணி முடிந்து இரண்டாம் போக சாகுபடி துவங்கும் போது தண்ணீர் பற்றாக்குறை ஏற்படும். அப்போது சாத்தனூர் அணையில் இருந்து மூன்று முறை தண்ணீர் திறப்பது வழக்கம்.

இந்த தண்ணீர் திருக்கோவிலூர் அணைக்கட்டில் திருப்பி விடப்பட்டு 100க்கும்

மேற்பட்ட ஏரிகள் நிரம்பும். இதன் காரணமாக நிலத்தடி நீர்மட்டம் எப்போதும் அதிகரித்து இருக்கும். கிணற்று நீர், ஆழ்துளை கிணறு மூலம் மானாவாரி நிலங்களில் மணிலா, உளுந்து, கம்பு, எள் பயிர் செய்வர்.

இந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை பொய்த்து போனது. பனிப்பொழிவு துவங்கி விட்டதால் இனி மழைக்கு வாய்ப்பு இல்லை என விவசாயிகள் கூறுகின்றனர். இதனால் ஏரி, குளங்கள் வற்றிய நிலையில் உள்ளன. நிலத்தடி நீர்மட்டமும் குறைந்து வருகிறது. இதனைக் கொண்டு சம்பா நெல் நடவு செய்ய முடியாது என்ற நிலையில் விவசாயிகள் உள்ளனர்.

நெல், கரும்பு, வாழை பயிர் செய்யும் நஞ்சை நிலங்களை உழவு செய்து தானியவகை பயிர் செய்ய தயார் செய்து வருகின்றனர். புஞ்சை பயிர் செய்யும் நிலங்கள் கரம்பாக போடப்பட்டுள்ளது.

இதனால் திருக்கோவிலூர் பகுதியில் இந்த ஆண்டு நெல் விளைச்சல் பெருமளவில் பாதிக்கப்படும்.

மானாவாரி நிலங்கள் வானம் பார்த்த பூமியாக காய்ந்து விவசாயிகள் வருவாயை இழக்கக்கூடும் என்ற அச்சம் எழுந்துள்ளது.

**ஆத்தூரில் பருத்தி ஏலம் ரூ.40 லட்சம் வர்த்தகம்**

ஆத்தூர்: ஆத்தூர் புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில், 40 லட்சம் ரூபாய்க்கு, பருத்தி வர்த்தகம் நடந்தது.

ஆத்தூர் புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நடந்த, பருத்தி ஏலத்தில், ஆத்தூர், தலைவாசல், சின்னசேலம், கள்ளக்குறிச்சி, பெரம்பலூர் பகுதியில் இருந்து, 200 விவசாயிகள், 2,000 பருத்தி மூட்டைகள் விற்பனைக்கு கொண்டு வந்தனர். இதில், சேலம், ஆத்தூர், கோவை, திருப்பூர், திருச்சி, கும்பகோணம் பகுதியை சேர்ந்த, 26 வியாபாரிகள் கலந்து கொண்டு, பருத்தி மூட்டைகளில், ஆய்வு செய்து, பருத்தி தரத்துக்கு ஏற்ப விலை நிர்ணயம் செய்தனர்.

அதில், பி.டி., ரகம் குவிண்டால் அதிகபட்சம், 4,649 ரூபாய், குறைந்தபட்சம், 4,039

ரூபாய், டி.சி.ஹெச்., ரகம் குவிண்டால் அதிகபட்சம், 6,959 ரூபாய், குறைந்தபட்சம், 6,236 ரூபாய் என, விற்பனையானது. 2,000 பருத்தி மூட்டைகள், 40 லட்சம் ரூபாய்க்கு வர்த்தகம் நடந்தது.

**நா.பேட்டையில் மஞ்சள் ஏலம்:ரூ.48 லட்சத்திற்கு விற்பனை**

ராசிபுரம்: நாமகிரிப்பேட்டை வேளாண் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று, 48 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் ஏலம் போனது. தமிழகத்தில், ஈரோட்டுக்கு அடுத்ததாக நாமகிரிப்பேட்டையில் மஞ்சள் மண்டிகள் அதிகம் உள்ளது. ஒவ்வொரு வாரமும், செவ்வாய்கிழமை, நாமகிரிப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க வளாகத்தில் ஏலம் நடக்கும். தனியார் மஞ்சள் மண்டிகள் உள்பட, நாமகிரிப்பேட்டை, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, மங்களபுரம், மெட்டாலா மற்றும் சேலம் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள விவசாயிகள், மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வருவர். மசாலா தயாரிக்கும் நிறுவனங்கள் நேரடியாக வந்து மஞ்சளை வாங்கி செல்கின்றன. நேற்று நடந்த ஏலத்தில், 65 கிலோ கொண்ட, 1,288 மூட்டைகள் விற்பனைக்கு வந்தது. விரலி ரகம், குவிண்டாலுக்கு அதிக பட்சம், 9,339 ரூபாய்க்கும், குறைந்த பட்சம், 5,109 ரூபாய்க்கு ஏலம் போனது. உருண்டை ரகம் மஞ்சள் அதிக பட்சம், 7,349 ரூபாய்க்கும், குறைந்த பட்சம், 4,171 ரூபாய்க்கும் ஏலம்போனது. அதே போல், பனங்காலி ரகம் அதிக பட்சம், 13 ஆயிரத்து, ஒன்பது ரூபாய்க்கும், குறைந்த பட்சம், 9,199 ரூபாய்க்கும் ஏலம் போனது. நேற்று ஒரே நாளில், 48 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் விற்பனையானது.

**டிச., 24 நாட்டுக்கோழி வளர்ப்பு பயிற்சி முகாம்**

நாமக்கல்: பண்ணையாளருக்கான நாட்டு கோழி வளர்ப்பு மற்றும் மூலிகை முதலுதவி மருத்துவம் என்ற தலைப்பில், ஒரு நாள் பயிற்சி முகாம், டிசம்பர், 24ம் தேதி நடக்கிறது.

பேராசிரியர் மோகன் வெளியிட்டுள்ள அறிக்கை: நாமக்கல்- திருச்சி சாலை கால்நடை மருத்துவமனை வளாகத்தில் அமைந்துள்ள, கோழிகளுக்கான மரபுசார் மூலிகை மருத்துவ ஆராய்ச்சி மையத்தில், பண்ணையாளர்களுக்கான, "நாட்டுக்கோழி வளர்ப்பும் மற்றும் மூலிகை முதலுதவி மருத்துவமும்' என்ற தலைப்பில், ஒரு நாள் பயிற்சி வகுப்பு, டிசம்பர், 24ம் தேதி நடக்கிறது. மதியம், 1.30 மணிக்கு நடக்கும் இப்பயிற்சி வகுப்பில் பங்கேற்க விருப்பம் உள்ளவர்கள், 94432 51330, 02486 233230 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**மரவள்ளி கிழங்கு விலை உயர்வு சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம்**

அரூர்: மரவள்ளி கிழங்கு விலை அதிகரித்து வருவதை அடுத்து, மரவள்ளி சாகுபடியில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். தர்மபுரி மாவட்டத்தில் விவசாயம் பிரதான தொழிலாக உள்ளது. நடப்பாண்டு மாவட்டத்தில் போதிய பருவமழை பெய்யவில்லை. இதனால் மாவட்டத்தில் பெரும்பாலான விவசாயிகள் மானாவரி மற்றும் குறைந்த பாசன வசதியில் சாகுபடி தரும் பயிர்களை சாகுபடி செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். நடப்பாண்டு, 70 கிலோ கொண்ட மரவள்ளிக்கிழங்கு மூட்டை ஒன்றுக்கு, 950 ரூபாய் வரை தற்போது விற்பனையாகிறது. இதனால், தர்மபுரி, நல்லம்பள்ளி, மொரப்பூர், அரூர், பாப்பிரெட்டிப்பட்டி உள்ளிட்ட பகுதியில் அதிகளவில் விவசாயிகள் மரவள்ளிக்கிழங்கு சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர். தற்போது மரவள்ளிக்கிழங்கு விலை உச்சத்தில் இருப்பதால் விவசாயிகள் ஆர்வத்துடன், 5 முழம் நீளம் கொண்ட ஒரு மரவள்ளிக்கிழங்கு கொம்பு கட்டுகளை, 300 முதல் 400 ரூபாய் வரை வாங்கி

செல்கின்றனர். இதுகுறித்து அரூர் பகுதியை சேர்ந்த விவசாயிகள் கூறியது: நடப்பாண்டு மரவள்ளிக்கிழங்கு விலை உச்சத்தில் உள்ளது. போதிய மழை இல்லாததால் பெரும்பாலான விவசாயிகள் மரவள்ளிக்கிழங்கையே சாகுபடி செய்ய விருபும்கின்றனர். வரும் ஆண்டும் மரவள்ளிக்கிழங்குக்கு நல்ல விலை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் செங்கம், திருப்பத்தூர் போன்ற கொம்புகளை , ஒரு லோடு, 15 ஆயிரம் ரூபாய்க்கு வாங்கி வருகின்றனர். மேலும் உள்ளூரில் இருந்தும் மரவள்ளி கொம்புகளை விவசாயிகள் வாங்கி செல்கின்றனர். இவ்வாறு அவர் கூறினார்.

**கர்நாடகாவில் இருந்து வெல்லம் வரத்து :தமிழகத்தில் வெல்லம் விலை வீழ்ச்சி**

தர்மபுரி: தமிழகத்திற்கு, கர்நாடகா மாநிலத்தில் இருந்து வெல்லம் வரத்து அதிகரித்ததால், தமிழகத்தில் வெல்லம் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது.தமிழகத்தில் சாகுபடி செய்யப்படும் முக்கிய பயிர்களில் ஒன்றாக கரும்பு திகழ்ந்து வருகிறது. பணப்பயிர்களில் ஒன்றான கரும்புக்கு அரசு, விவசாயிகள் எதிர்பார்த்த விலை கொடுக்காமல் ஏமாற்றி வந்தாலும், தனியார் சக்கரை ஆலைகள் மற்றும் வெல்ல வியாபாரிகள் விவசாயிகளுக்கு கட்டுபடியான விலையை கொடுத்து வருகின்றனர். இதனால் கரும்பு விவசாயிகள் மாநிலம் முழுவதும் தொடர்ந்து கரும்பு சாகுபடி செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். குறிப்பாக விவசாயத்தை பிரதான தொழிலாக கொண்ட தர்மபுரியில், மா, நெல் ஆகிய பயிர்களுக்கு அடுத்த படியாக கரும்பு, 40 ஆயிரம் ஏக்கருக்கு மேல் சாகுபடி செய்யப்படுகிறது. இதனால் மாவட்டத்தில் வெல்ல உற்பத்திக்கு கரும்பு தட்டுப்பாடு இன்றி கிடைத்து வருகிறது. குறிப்பாக கடந்த சில ஆண்டுகளுக்கு முன், மாவட்டத்தில் கரும்பு சாகுபடி அதிமாக இருந்ததால், இதை நம்பி தர்மபுரியை அடுத்த ஏ.கொல்லஹள்ளி, கடகத்தூர், பாப்பாரப்பட்டி மற்றும் பாலக்கோடு உட்பட்ட பகுதிகளில், 100க்கும் மேற்பட்ட சிறு வெல்ல உற்பத்தி ஆலைகளை நடத்தி வந்தனர். வெல்லத்திற்கு உரிய விலை கிடைத்து வந்ததால் உற்பத்தியாளர்கள் லாபம் அடைந்து

வந்ததுடன், பலருக்கு வேலைவாய்ப்பும் வழங்கி வந்தனர். ஆனால் கடந்த சில ஆண்டுகளாக இடைதரகர்களின் ஆதிக்கம் மற்றும் அருகில் உள்ள கர்நாடகா மாநிலத்தில் இருந்து வெல்ல வரத்து ஆகியவை காரணமாக, வெல்லத்திற்கு போதிய விலை கிடைக்காமல், தர்மபுரி மாவட்ட வெல்ல உற்பத்தியாளர்கள் கடும் அவதியடைந்துள்ளனர். இது குறித்து கரும்பு உற்பத்தியாளர் ஒருவர் கூறியது: வெல்ல ஆலைகளுக்குல கரும்பு அரவை செய்ய அரசு மானிய விலையில் மின்சாரம் வழங்காததாலும், தொழிலை மேம்படுத்த வங்கிகளில் கடன்கள் வழங்கப்படாததாலும், உற்பத்தியாளர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு வந்தனர். இதனால் மாவட்டத்தில் இயங்கி வந்த, 70க்கும் மேற்பட்ட வெல்ல உற்பத்தி ஆலைகளை, அதன் உரிமையாளர் அடைத்து விட்டு மாற்றுத் தொழிலுக்கு சென்றனர். இதை நம்பியிருந்த பல தொழிலார்கள் வேலை வாய்ப்பை இழந்தனர். ஆனாலும், மாவட்டத்தில், 30 உற்பத்தியாளர்கள் மட்டும், வெல்லம் உற்பத்தியில் தொடர்ந்து ஈடுபட்டுள்ளனர். கடந்த தீபாவளி திருநாளை ஒட்டி ஒரு கிலோ வெல்லம், 40 ரூபாய் வரை விற்பனையானததால், உற்பத்தியாளர்களுக்கு ஓரளவுக்கு லாபம் கிடைத்தது. இதனால் பொங்கல் பண்டிகைக்காக, உற்பத்தியாளர்கள், அதிகளவில் வெல்ல உற்பத்தி செய்து வந்தனர். இந்நிலையில் கடந்த சில தினங்களாக கர்நாடகா மாநிலம் மாண்டியா உள்ளிட்ட பகுதிகளில் இருந்து கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம், வேலூர், திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களுக்கு, ஒரு கிலோ வெல்லம், 30 ரூபாய் விலைக்கு, மண்டிகளுக்கு கொண்டு வந்து தருகின்றனர்.

இதனால் தர்மபுரி மாவட்டத்தில் வெல்ல விலை குறைந்துள்ளதால், உற்பத்தியாளர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். வெல்ல உற்பத்தியாளர்களை பாதுகாக்கும் வகையில் தமிழக அரசு வெல்ல ஆலைகளுக்கு மானிய விலையில் மின்சாரம் வழங்குவதுடன், கட்டுபடியான விலையை நிர்ணயம் செய்யவேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

**மேட்டூர் வலதுகரை விவசாயிகள் அந்தியூரில் உபரிநீர் திட்ட சிறப்பு மாநாடு**

ஈரோடு: மேட்டூர், பாலாறு பகுதியில் தடுப்பணை கட்டவேண்டும், என மேட்டூர் வலதுகரை விவசாயிகளின் உபரிநீர் திட்ட சிறப்பு மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஈரோடு மாவட்டம், அந்தியூர் தாலுகா, பட்லூாரில் மேட்டூர் வலதுகரை விவசாயிகள் சங்கத்தின், உபரிநீர் திட்ட சிறப்பு மாநாடு, தமிழக ஐக்கிய விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் ராஜேஷ்வரன் தலைமையில் நடந்தது.

மாநிலத்தலைவர் சண்முகம் அறிவித்த தீர்மானத்தில், இந்தியா முழுவதுமாக நதிகளை இணைக்க, மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். காவிரியில் வரும் தண்ணீரை, விரையம் இன்றி முழுமையாக பயன்படுத்தவும், வறட்சி பாதித்த பகுதிகளுக்கு, தண்ணீரை திருப்பிவிடவும், மேட்டூர் அருகே உள்ள பாலாறு பகுதியில், தடுப்பணை கட்டி, தோனி மடுவு, தண்டா, தார்க்காடு, நீதிபுரம், வெள்ளக்கரட்டூர், விராலிகாட்டூர், வெள்ளித்திருப்பூர், மாத்தூர், எண்ணமங்கலம், அந்தியூர் பெரிய ஏரி ஆப்பக்கூடல் வழியாக, பவானி ஆற்றில் இணைக்கும், மேட்டூர் வலது கரை உபரிநீர் திட்டத்தை, மத்திய, மாநில அரசுகள் உடனடியாக நிறைவேற்ற வேண்டும். இதனால் கோடையில் வறட்சியை சமாளிக்கவும், தண்ணீர் வீணாவதை தடுக்க முடியும் ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**அம்பையில் விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம்**

அம்பை, : அம்பையில் வட்டார அளவிலான விவசாயிகள் குறைதீர்க்கும் கூட் டம் சப்-கலெக்டர் ரோகிணி ராம்தாஸ் தலைமையில் நடைபெற்றது. தாசில்தார் சரஸ்வதி முன்னிலை வகித் தார்.

கூட்டத்தில் ராதாபுரம், நாங்குநேரி, அம்பை வட்டங் களை சேர்ந்த முற் போக்கு விவசாயிகள் கலந்து கொண் டனர். விவசாயிகள் சொரி முத்து, சுப்பிமணியம், சங் கரன், பலர் தங்களது பகுதி யில் உள்ள குறைகளை கூறி னர்.

அதற்கு சப்-கலெக்டர் அங்கு வந்திருந்த அதிகாரிகளிடம் விவாதித்து பதில் கூறினார். மேலும் விவசாயி கள் தங்கள் குறைகளை எந்த நேரத்திலும் 9445000477 எண்ணில் தொடர்பு கொள் ளலாம் என்றும் கூறினார்.

வேளாண்மை இயந்திர மயமாக்கல் திட்டத்தின் கீழ் வேளான் கருவிகளுக்கான மானியம், பயிர் காப்பீடு திட்டம் பற்றி கூறப்பட்டது. கூட்டத்தில் அம்பை வேளாண் இயக்குனர் சுந்த ரம், வேளாண் அலுவலர் பரத்வாஜ், சேரன்மகாதேவி தோட்டக்கலை உதவி இயக்குனர் பாலசுப்பிரமணியம், பொது உதவி பொறியாளர் சகாய இளங்கோ, வேளாண் மை பொறியியல் துறை வெள்ளையன், கூட்டுறவு சார்பதிவாளர் தெய்வநாய கம், பலர் கலந்து கொண் டனர்.

தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ரூ.1500 மதிப்புள்ள நெல்சாகுபடி செயல்முறை விளக்க இடு பொருள் 3 பேருக்கும், ரூ 7,500 பெறுமான துவரை சாகுபடி செயல்முறை விளக்க இடுபொருள் ஒருவருக்கும் சப்-கலெக்டர் வழங்கினார். பரத்வாஜ் நன்றி கூறினார்.

**அதிக லாபம் தரும் கொட்டகை முறை ஆடு வளர்ப்பு**

சேலம், : ஆடுகளை கொட்டில் முறையில் அடை த்து வளர்த்தால், அதிக லாபத்தை பெறலாம் என்று கூறுகிறார், நவலடி ஆட்டுப்பண்ணை நடத்தி வரும் செல்வராஜ். சிவில் இன்ஜினியரிங் முடித்து விட்டு விவசாயத்தை விரும்பி செய்து வரும் அவர் மேலும் கூறியதாவது:

அதிக லாபம் தருவதால் வெள்ளாடு வளர்ப்பை, படித்த இளைஞர்கள் அதிக அளவில் செய்து வருகின்றனர். பராமரிப்பு மிகவும் குறைவு என்பதால், ஏராளமா னோர் ஆடுகளை வளர்க்க விரும்புகிறார்கள். பண்ணை கள் அமைத்து ஆடு வளர்ப்பவர்கள் குறைவாக இருக்கின்றனர். எங்கள் பண்ணை யில் கொட்டகை முறையில் ஆடுகளை வளர்க்கிறோம். வெள்ளாடு வளர்க்க குறைந்த முதலீடே தேவைப்படுகிறது.

சிறிய அளவில் 25 ஆடு கள் கொண்ட ஆட்டு பண் ணை (பரண்மேல் குடில்) அமைக்க குறைந்தபட்சம் ஒரு லட்சம் ரூபாய் போதுமானது. நாட்டு வெள்ளாடு களை விட தலைச்சேரி ஆடுகள் விரைவாக வளரும். எடையும் அதிகரிக்கும். எனவே இந்த கொட்டகை முறையில் 25 தலைச்சேரி ஆடுகளை வளர்க்கலாம். இதற்கு ஒரு போயர் கிடாய் போதும். 25 ஆடுகளுக்கு தீவனம் வளர்க்க, ஒரு ஏக்கர் நிலம் போதும். போயர் கிடாயை இனக்கலப்பு செய்து பெறப்படும் இனம் தரமானதாக உள்ளது.

தலைச்சேரி பெட்டை ஆடுகள் 30 முதல் 40 கிலோ வரையிலும், கிடாக்கள் 40 முதல் 50 கிலோ வரையும் எடை இருக்கும். நாள் ஒன்றுக்கு ஒரு லிட்டர் முதல் 2 லிட்டர் வரை பால் கறக்கும் திறன் இந்த ஆடுகளுக்கு உண்டு. முதல் முறை குட்டி போடும் போது மட்டும் ஒரு குட்டி போடும். அதன் பின்னர் ஒரு ஈற்றுக்கு 2 முதல் 3 குட்டிகள் வரை ஈனும்.

தென்னாப்பிரிக்கா நாட்டை சேர்ந்த போயர் ஆடுகள், இறைச்சிக்காக வளர்க்கப்படுகின்றன. இந்த ஆட்டின் குட்டிகள் பிறந்த உடன் மூன்றரை கிலோ எடை இருக்கும். பெட்டை ஆடுகள் 60 முதல் 70 கிலோவும், கிடா 100 கிலோ எடையும் இருக்கும். தலைச்சேரி பெட்டை ஆட்டு டன், போயர் கிடாயை சேர் க்கும் போது அதிக எடை உள்ள குட்டியை ஈனுகிறது.

இந்த குட்டி ஒரு மாதம் 6 கிலோ வரை எடை அதிகரிக்கும். மேலும் இதற்கு நோய் எதிர்ப்பு சக்தி அதிகம். இந்த கலப்பின பெட்டை ஆடுகள் இன விருத்தியாகவும், கலப்பின கிடாய் இறைச்சிக்காகவும் பயன்படுகிறது. இதனுடைய கறி மிருதுவாகவும், சுவையாகவும் இருக்கும். சாதாரண ஆட்டை விட போயர் ஆடு விரைவில் வளர்வதால் தீவன செலவு மிச்சமாகும்.

ரூ4 லட்சம் லாபம்:

ஆடுகளை புதியதாக வளர்ப்பவர்களுக்கு முதல் ஆண்டு லாபம் இல்லை. 2வது ஆண்டில் ஒரு ஆடு 6 குட்டிகள் வரை போடும். எனவே 25 ஆடுகள் மூலமாக 150 குட்டிகள் கிடைக்கும். இதை 3 மாதம் வளர்த்து விற்கும் போது ஒருகுட்டி ரூ3 ஆயிரத்து 500க்கு விற்கலாம். 25 ஆடுகள் மூலமாக ஆண்டுக்கு 5 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் கிடைக்கும்.

25 ஆடுகளை வளர்க்க வேலையாள் கூலி, பசுந்தீவனம் மற்றும் பராமரிப்பு செலவு என ரூ1 லட்சம் ஆகும். எனவே ஆண்டுக்கு ரூ4 லட்சம் லாபம் கிடைக்கும். இவ்வாறு செல்வராஜ் கூறினார்.

**மழையளவு குறைந்ததால் மக்காச்சோளம் விளைச்சல் பாதிப்பு**

சத்தியமங்கலம், : சத்தியமங்க லத்தை அடுத்த தாளவாடி பகுதியில் மழையளவு குறைந்ததால் மக்காச்சோள விளைச்சல் குறைந்துள்ளது.

தாளவாடி மலைவட்டாரத்தில் உள்ள பெரும்பான்மையான விளைநிலங்களில் மானாவாரிப் பயிர்களான மரவள்ளிக்கிழங்கு, ராகி, மக்காச்சோளமும் கிணற்றுப்பாசனம் மூலம் உருளைக்கிழங்கு, கேரட், பீம்ஸ், பூண்டு, காலிபிளவர் மற்றும் முட்டைக்கோஸ் சாகுபடி செய்து வந்தனர்.

சென்ற ஆண்டு பருவமழை பொய்த்துவிட்டதால் மானாவாரி நிலங்கள் தரிசாக கிடந்தன. அண்மையில் பெய்த பருவமழையால் தாளவாடி விவசாயிகளுக்கு நம்பிக்கை ஏற்பட்டதின் விளைவாக மக்காச்சோளம் பயிர் செய்ய ஆர்வம் காட்டினர்.

இதையடுத்து, கடந்த 2 மாதங்களுக்கு முன்பு பெய்த மழை காரணமாக நிலத்தில் ஈரப்பதம் பிடிப்பு உள்ளபோதே ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலப்பரப்பில் மக்காச்சோளம் விதைத்தனர்.

தலமலை, மல்லன்குழி, கோடிபுரம், நெய்தாளபுரம், தொட்டபுரம், திகினாரை, நெய்தாளபுரம், சிக்கஹள்ளி உள்ளிட்ட 50 க்கும் மேற்பட்ட கிராமங்களில் சுமார் 10000 ஏக்கர் பரப்பளவில் மக்காச்சோளம் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

3 மாதப்பயிரான மக்காச்சோளப் பயிர் தற்போது ஓரளவு வளர்ந்து கதிர் பிடித்துள்ளது. தற்போது மழை குறைந்துள்ளதால் கதிர்கள் முற்றாமல் பயிர்கள் வெயிலில் காய்ந்தன. இதனால் ஏக்கருக்கு 25 குவிண்டாலில் இருந்து 5 குவிண்டாலாக விளைச்சல் குறைந்துள்ளது.

ஏக்கருக்கு ரூ.12 ஆயிரம் வரை செலவு செய்துள்ளதால் நஷ்டம் ஏற்படும் நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். தற்போது மக்காச்சோளம் குவிண்டால் ரூ.950 முதல் 1100 வரை விற்பனையாகிறது. மழை குறைவால் ஏக்கருக்கு ரூ.5000 வரை நஷ்டம் ஏற்படுவதால் மக்காசோளத்தை அறுவடை செய்ய விவசாயிகள் தயக்கம் காட்டி வருகின்றனர்.

**புதுவை-திண்டிவனம் சாலையில் மரக்கன்று நடும் பணி தீவிரம்**

புதுச்சேரி, : புதுவை-திண்டிவனம் தேசிய நெடுஞ்சாலையில் ஒரு லட்சம் மரக்கன்று நட்டு வளர்க்கும் விதமாக தற்போது மரக்கன்றுகள் நடப்பட்டு வருகிறது.

புதுவை இந்திராகாந்தி சிலையிலிருந்து திண்டிவனம் மேம்பாலம் வரையில் உள்ள தேசிய நெடுஞ்சாலையை மொரட்டாண்டி டோல்கேட் நிர்வாகம் பராமரித்து வருகிறது. தானே புயலில் மரங்கள் விழுந்ததாலும், சாலையையொட்டி மரங்கள் நடவேண்டிய அவசியத்தை உணர்ந்தும் அங்கு ஒரு லட்சம் மரக்கன்று நடும் திட்டத்தை தொடங்கியுள்ளது. முதற்கட்டமாக மொரட்டாண்டி டோல்

கேட்டிலிருந்து சுமார் 2 கி.மீ தூரம் வரை மா, புளியம், தேக்கமரம் போன்ற மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளது. இன்னும் 3 மாதத்தில் திண்டிவனம் வரை சாலையோரத்தின் இருபுறமும் மரக்கன்றுகள் நட முடிவு செய்யப்பட்டுள்ளது. கால்நடைகள் மரக்கன்று களை சேதப்படுத்தாமல் மரக்கன்றுகள் பாதுகாக்கப்பட்டு வருகிறது. பூச்சிகள் தாக்கமல் இருக்க அவ்வப்போது பூச்சி மருந்து, உரம், மரக்கன்றுக்கு தேவையான நீர் ஆகியவை வழங்கப்படுகிறது. இதே போல் சென்டர் மீடியனில் வளர்ந்து சாய்ந்துள்ள பூச்செடிகளை கவாத்து செய்யும் பணியும் நடந்து வருகிறது.

**நெல் குவிண்டாலுக்கு ரீ5,000 வழங்க வேண்டும் இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் வலியுறுத்தல்**

திருத்துறைப்பூண்டி, : ஒரு குவிண்டால் நெல்லுக்கு ரூ.5,000 வழங்க வேண்டும் என்று இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் வலியுறுத்தியுள்ளார். திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி அருகே உள்ள மேட்டுப்பாளையத்தில், மாவட்ட இந்திய ஜனநாயக வாலிபர் சங்க அரசியல் பயிற்சி முகாம் நடந்தது. இதில் இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் கலந்து கொண் டார். அப்போது அவர் நிருபர்களிடம் கூறியதாவது:

தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்டங்களில் நெல் அறுவடைக்கு தயாராக உள்ளது. ஆனால் அரசு நெல்லை கொள்முதல் செய்யுமா என்ற அச்சம் விவசாயிகள் மத்தியில் உள்ளது. அரசிடம் சரியான கொள்கை இல்லை. விவசாயிகள் உற்பத்தி செய்கிற பொருட்களுக்கு விவசாயிகள் நினைக்கிற விலை கிடையாது. நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 5 ஆயிரம் விலை கொடுக்க வேண்டும். அப்போது தான் விவசாயிகளின் தரம் உயரும். இதை அரசு செய்ய வேண்டும். 43 சதவீத குழந்தைகளுக்கு சத்தான உணவு கிடைக்கவில்லை. எண் டோ சல்பான் அறிமுகப்படுத்தி 40 ஆண்டில் பலர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இனிவரும் காலங்களில் பூச்சிக்கொல் லியை தவிர்த்து இயற்கை விவசாயத்தை மேற்கொள்ள வேண்டும். விவசாயிகள் இயற்கை விவசாயம் செய்வதன் மூலம் ஆரம்பத் தில் மகசூல் குறைந்தாலும் வரவு செலவு

பார்க்கும் போது நிகர லாபம் இயற்கை விவசாயத்தில் மட்டுமே கிடைக்கிறது. மண் வளம் பாதுகாக்கப்படுகிறது. நுகர்வோர்களுக்கு நஞ்சு இல்லா உணவு கிடைக்கிறது.

எண்டோசல்பான் மருந்தினை கேரளாவில் அரசு தோட்டத்தில் அடித்ததில் 1,300 ஏக்கர் நிலம் பாதிக்கப்பட்டது. நீரிலும் கலந்தது. திருவாரூர் மாவட்டத்தில் குருடாயில் எடுப்பதன் மூலம், விவசாயமும் நிலத்தடி நீரும் பாதிப்படைந்துள்ளது.இவ்வாறு நம்மாழ்வார் கூறினார்.

**கடலைக்கு குறைந்தபட்ச விலை நிர்ணயிக்க வேண்டும் விவசாயிகள் வலியுறுத்தல்**

மன்னார்குடி, : கடலை க்கு குறைந்தபட்சவிலை நிர்ணயிக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த ஆண்டு திருவாரூர் மாவட்டத்தில் 4 ஆயிரம் எக்டேர் கடலை சாகுபடி நிர்ணயிக்கப்பட்டிருந்தது. தண்ணீர் பற்றாக்குறை காரணமாக பல விவசாயிகள் கடலை சாகுபடியில் ஈடுபட்டதால் 5 ஆயிரம் எக்டேருக்கும் அதிகமான பரப்பளவில் விவசாயிகள் கடலை சாகு படி செய்தனர். இதனால் கடலை உற்பத்தி அதிகரித்து உற்பத்தி செலவுக்கு ஏற்ற விலை கிடைக்காமல் விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். உற்பத்தி அதிகரித்ததே தவிர தனியார் கடைகளில் விற்கப்படும் தரமற்ற கடலை விதைகளை வாங்கி பயிரிட்டதால் விவசாயிகள் ஒவ்வொருவரும் தனிப்பட்ட வகையில் மகசூல் குறைந்து பெரும் நஷ்டத்திற்கு உள்ளாகினர். இதற்கு முக்கிய காரணம் இப்பகுதிக்கேற்ற கடலை விதைகள் தனியாரிடம் மட்டுமே கிடைக்கின்றன. அவற்றை வேளாண்மை அதிகாரிகள் கண்காணிக்காமல் விட்டு விடுவதால் தனியார் நிர்ணயித்த விலைக்கே விதை கடலை களை வாங்க வேண்டியுள்ளது. இதுதவிர 40 கிலோ விதை கடலை மூட்டை வாங்கினால் அதில் 7 கிலோ அளவிலான விதைகள் முளைப்புத்திறனற்றதாக உள்ளது. எனவே விதைநெல்லை தர ஆய்வு செய்து சான்று வழங்குவதைபோல, கடலை விதை களையும் ஆய்வுக்கு உட்படுத்தி சான்றளித்த பின்னரே விற்பனை செய்ய வேண்டும். அதுபோல் கடலைக்கான விலை நிர்ணயத்தை அரசே செய்து விளைவித்த கடலையை அரசு சந்தை படுத்திக் கொடுக்க வேண் டும் என்று விவசாயிகள் வலியுறுத்துகின்றனர்.

இதுபற்றி  விவசாயி காரிக்கோட்டை ராஜேந்திரன் கூறியது: கடந்த ஆண்டு விதை கடலை  40 கிலோ மூட்டை ஒன்று ரூ. 4 ஆயிரம் வரை விற்கப்பட்டது. அதற்கு முந்தைய ஆண்டுகளில் இதன் விலை ரூ.2,500 என்ற அளவில்தான் இருந்தது. மேலும் உரவிலை ஏற்றம் போன்ற வை காரணமாக கடலை சாகுபடி செல வானது. முந்தைய ஆண்டு களை விட ஏக்கர் ஒன்றுக்கு 5ஆயிரம் வரை உயர்ந்துள்ளது. அதே நேரத்தில் கடலை கொள்முதல் விலையை வியாபாரிகள் தங்கள் நோக்கம் போல குறைத்து விடுகின்றனர். கடலை மூட்டைகளை எடுத்துச்சென்று விற்பனை செய்வதற்கு போதிய விழிப்புணர்வு விவசாயிகளிடையே இல்லாததை வியாபாரிகள் பயன்படுத்தி விவசாயிகளின் வீடுதேடி வந்து கடலையை கொள் முதல் செய்கின்றனர். இதற்காக வியாபாரிகள் ஒன்றுகூடி சின்டிகேட் அமைத்து கொள்முதல் செய்வதை தாமதப்படுத்துகின்றார்கள். உரியகாலத்தில் கடலை விற்கப்படவில்லையென்றால் வீணாகிவிடும் என்ற அச்சத்தால் விவசாயிகள், வியாபாரிகள் நிர்ணயித்த விலைக்கே விற்கவேண்டிய சூழல் உருவாகி விடுகிறது. இதேபோல் கடந்த ஆண்டு ரூ.2,500க்கு விற்கப்பட வேண்டிய கடலை மூட்டை களை வியாபாரிகள் ரூ. 1,500 லிருந்து  ரூ.1,700 வரைதான்  வியாபாரிகள் கொள்முதல்செய்தனர். இதுபோன்ற வியாபாரிகளிடமிருந்து விவசாயி களை காப்பாற்ற வேண்டுமெனில் கடலைக்கான குறைந்தபட்ச கொள்முதல் விலை யை நிர்ணயிக்க வேண்டும். கடலைவிதைகளை தரப்பரிசோதனை செய்து சான்றளிக்கவேண்டும். என்றார்.

இதுபற்றி வேளாண்மை அதிகாரி கூறியது, வேளாண் மை துறையில் கடலை விதைகளை ஸ்டாக் வைத்து விற்பனை செய்வதற்கான கிடங்கு வசதிகள் இல்லை. அதேபோல் உற்பத்தியாகிற கடலைகளை விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்தோ அல்லது அவையனைத்தும் விற்பனையாகிறவரை கடலை மூட்டை களை வேளாண் மை ஒழுங்குமுறை விற்பனைத்துறையின் பொறுப்பில் ஸ்டாக் வைத்து பாராமரிப்பதற்கான கிடங்கு வசதியோ செய்துகொடுக்கப்படவில்லை. இதனால் கடலை விற்பனையில் தனியார் ஆதிக்கம் உள்ளதை மறுக்கமுடியாது. அதே நேரத்தில் கடலை, உளுந்து, எள், பருத்தி போன்ற பயிர்கள் வருடத்திற்கு வருடம் உற்பத்தி அளவிற்கேற்ப அதன் கொள்முதல்விலை சரிவதும் ஏறுவ தும்

என்ற போக்கு இருப் பதை தடுக்க முடி யாது. வேளாண்மைத்துறையின் கண்காணிப்பு குறைவு என்பதால் விவசாயிகளிடம் பல்வேறு காரணங்களைகூறி வியாபாரிகள் விலை குறைத்து லாபத்தை அதிகப்படுத்திக் கொள்கிற யுக்தியை கடைபிடிப்பதை தடுக்க, விவசாயிகள் உற்பத்தி செய்கிற அனைத்தையும் கொள்முதல்செய்தல் அல்லது அரசு அதிகாரிகள் முன்னிலையில் விலை நிர்ணயத்தை செய்ய வைத்தல் போன்றவற்றை அரசு தனது கொள்கை முடிவாக அறிவித்தால் மட்டுமே விவசாயிகள் எதிர்பார்ப்பை அதிகாரிகளால் நடை முறைப்படுத்த முடியும் என்றார்.

**மாவட்டத்தில் உற்பத்தியாகும் கரும்புகளை அலங்கை அரசு சர்க்கரை ஆலைக்கு அனுப்ப கோரிக்கை**

திருப்புவனம் : சிவகங்கை மாவட்டத்தில் உற்பத்தியாகும் கரும்புகளை மதுரை மாவட்டத்தில் உள்ள அலங்காநல்லூர் அரசு சர்க்கரை ஆலை அரவைக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் என சிவப்பு நட்சத்திரம் மக்கள் இயக்க விவசாய அணி கோரிக்கை விடுத்துள்ளது. படமாத்துரில் இயங்கி வரும் சர்க்கரை ஆலைக்கு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து விவசாயிகள் தங்கள் வயலில் விளைந்த கரும்புகளை அனுப்புவது வழக்கம். ஆனால் சர்க்கரை ஆலை நிர்வாகம் முறையாக பணப்பட்டுவாடா செய்வது கிடையாது. மேலும் விவசாயிகள் வங்கியில் பெற்ற கடனை சர்க்கரை ஆலை நிர்வாகம் கரும்பு வெட்டிய பணத்தில் பிடித்தம் செய்து வங்கியில் கட்டுவது வழக்கம். ஆனால் கடந்த நான்கு வருடங்களாக விவசாயிகளிடம் பிடித்தம் செய்த 40 கோடி ரூபாய் பணத்தை வங்கியில் செலுத்தவில்லை. இதனால் வங்கிகள் விவசாயிகளுக்கு கடன் தர மறுத்துவிட்டன. இதனால் விவசாயிகள் கரும்பு பயிரிடுவதை குறைத்து விட்டனர். கரும்பு உற்பத்தி சில ஆண்டுகளாக 8 லட்சம் டன்னில் இருந்து 3 லட்சம் டன்னாக

குறைந்து விட்டது எனபது குறிப்பிடத்தக்கது. நடப்பாண்டில் ஏற்பட்டுள்ள வறட்சி காரணமாக 5 ஆயிரம் ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள கரும்புகள் கருகி விட்டது. இது குறித்தும் ஆலை நிர்வாகம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.
எனவே தற்போது கரும்பு பயிரிட்டுள்ள விவசாயிகள் தங்களது கரும்பை அலங்காநல்லூரில் இயங்கி வரும் அரசு சர்க்கரை ஆலைக்கு கொண்டு செல்ல மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து சிவப்பு நட்சத்திர மக்கள் இயக்க விவசாய அணி தலைவர் ஆதிமூலம் கூறுகையில், இப்பகுதியில் பயிரிடப்பட்டுள்ள கரும்பை வெட்டி அலங்காநல்லூர் ஆலைக்கு அனுப்ப தமிழ்நாடு சர்க்கரை ஆலை துறை ஆணையரிடம் அனுமதி பெற வேண்டும். மாவட்ட கலெக்டர் இதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்றார்.

**மானிய விலையில் விவசாயிகளுக்கு மருந்து தெளிக்கும் கருவிகள் தோட்டக்கலை அதிகாரி தகவல்**

கடவூர், : தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு மானிய விலையில் மருந்து தெளிக்கும் கருவிகள் வழங்கப்படும் என தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர் வீரமணி தெரிவித்துள்ளார்.இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: நடப் பாண்டில் தோட்டக்கலைத்துறை மூலம் விவசாயிகளுக்கு 50 சதவீத மானிய விலையில் மருந்து தெளிப்பான்கள் விநி யோகம் செய்யப்பட உள் ளது. தேசிய வேளா ண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் விவசாயிகளுக்கு மானிய விலையில் கை தெளிப்பான், விசை தெளிப் பான் மற்றும் பேட்டரி தெளிப்பான் ஆகியவை வழங்கப்பட்டு வருகிறது.

பல பயிர்களுக்கு பூச்சிகளை கட்டுப்படுத் தவும், வளர்ச்சி ஊக்கி களைக்கொல்லி தெளிப்பதற்கும், அனைத்து விவசாய பயிர்களுக்கும் பயன்படுவது தெளிப்பானாகும். எனவே தேவைப்படும் விவசாயிகள் கடலூர் வட்டார தோட்டக் கலை அலுவலர்களை அணுகி  முன்னு ரிமை அடி ப்படையில் பதிவு செய்து கொள்ள வேண்டும்.இவ் வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**அரியலூர் மாவட்டத்தில் 18 ஆயிரத்து 397 எக்டேரில் இறவை நிலக்கடலை சாகுபடி விவசாயிகள் தீவிரம்**

அரியலூர், : அரியலூர் மாவட்டத்தில் வடகிழக்குப் பருவ மழை யை பயன்படுத்தி 18 ஆயிரத்து 397 எக்டேர் பரப்பளவில் இறவை நிலக்கடலை சாகு படி பணிகளில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

அரியலூர் மாவட்டத்தில் எண்ணெய் வித்து பயிர்களான எள், சூரியகாந்தி மற்றும் ஆமணக்கு போன்ற பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டாலும் மார்கழி பட்டத்தில் இறவை நிலக்கடலை பயிரிடுவதற்கு அரியலூரில் 100 எக்டேர், ஜெயங்கொண்டத்தில் 262 எக்டேர், ஆண்டிமடத்தில் 599 எக்டேர், திருமானூரில் 509 எக்டேர், தா.பழூரில் 363 எக்டேர், செந்துறையில் 86 எக்டேர்  என இம் மாவட்டத்தில் ஒட்டுமொத்தமாக 18 ஆயிரத்து 397 எக்டேர் பரப்பளவில் சாகுபடி செய்யப்படுகிறது. இம் மாவட்டத்தில் நிலக்கடலை பயிர் முன்னர் அதிகளவில் பயிரிடப்பட்ட போதும் போதிய மழை இல்லாததால் கடந்தாண்டு பெயரளவுக்கே பயிரிடப்பட்டது. இதே நிலை நீடித்ததால் நிலக் கடலைக்கு மாற்றாக மக்காச்சோளத்தை பயிரிட்டு, நல்ல மகசூலைப் பெற்றனர்.

இந்த ஆண்டு போது மான அளவுக்கு மழை பெய்துள்ளதால் தற்போது மார்கழி பட்டத்தில் இறவை நிலக்கடலை பயிரிடுவதற்கு விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். இம் மாவட்டத்தில் பரவலாக கடந்த சில தினங்களுக்கு பெய்த மழையை பயன்படுத்தி டிராக்டரை கொண்டு வயலில் உழவுப் பணியை விவசாயிகள் தொடங்கி விட்டனர். தற்போது மார்கழி மற்றும் மாசி பட்டம் இறவை நிலக்கடலைக்கு ஏற்ற பருவமாகும். நிலக்கடலையில் அதிக மகசூல் பெறுவதற்கு சித்திரை, வைகாசி மாதங்களில் நிலத்தின் சரிவுக்கு குறுக்கே கோடை உழவு

செய்து தாய் அந்துப் பூச்சியின் கூட்டுப் புழுக் களை அகற்றி, நிலத்தடி நீர் சேமிப்பு செய்து, நிலத்தை பண்படுத்தி வைத்தல் அவசியமாகிறது.

மேலும் விவசாயிகள் ரகங்களை தேர்வு செய்வதற்கு முன்னர் அதற்குரிய பட்டங்களுக்கு ஏற்றார் போல் தேர்வு செய்தால் விவசாயிகள் அதிக மகசூல் பெறுவதற்கு ஏதுவாக இருக்கும். மேலும் வி.ஆர்.ஐ2, கோ2, கோ3, கோ. ஜி.என்4, வி.ஆர்.ஐ4 ஆகிய ரகங்கள் இறவைக்கு ஏற்ற ரகங்களாக உள்ளன.

**கலப்பு விதைகளால் நெற்பயிர்கள் பாதிப்பு விவசாயிகள் கண்ணீர் நிவாரணம் வழங்க வலியுறுத்தல்**

தஞ்சை, : சடையார்கோயிலில் சம்பா சாகுபடி செய்து கலப்பு விதையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண் டுமென மக்கள் குறைதீர் கூட்டத்தில் கோரிக்கை மனு கொடுக்கப்பட்டது.

தஞ்சை கலெக்டர் அலுவலகத்தில் பொதுமக்கள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டம் நேற்று நடந்தது. கலெக்டர் சுப்பையன் தலைமை வகித்து கோரி க்கை மனுக்களை பெற்றார்.

சாலியமங்கலம் மேலதிருபுவனம் தோப்பு தெருவை சேர்ந்தவர் மகாலிங்கம் தலைமையில் கொடுத்த கோரிக்கை மனுவில் கூறியிருப்பதாவது: எங்கள் பகு தியை சேர்ந்த விவசாயிகள், சடையார்கோயில் பகுதி யில் சம்பா சாகுபடி செய்துள்ளோம். அப்பகுதியில் உள்ள ஜெயசூர்யா டிரேட ர்ஸ் என்ற உரக்கடையில் 17 விவசாயிகள் ஆடுதுறை 38 ரக 30 கிலோ வீதம் விதை பைகளை ஒரு பை ரூ.1,125 வீதம் வாங்கினோம். இதை சுமார் 35 ஏக்கரில் குத்தகை சாகுபடி நிலத்தில் நெல்லை நடவு செய்தோம். அதில் ஒரு பகுதி பழுத்தும், ஒரு பகுதி கதிர் வந்தும், ஒரு பகுதி பயிராகவும் உள்ளது. மேற்படி விதை சீராக வள ராமல் பலவாறு வளர்ந்துள் ளது கலப்பு விதை என்பதை உறுதி செய்கிறது. இதனால் விவசாயம் பாதிக்கப்பட்டு அனைத்தும் வீணான நிலை யில் கடை உரிமையாளரி டம் முறையிட்டோம். அவர் வந்து பார்வையிட்டும் நிவா ரணம் கிடைக்கவில்லை. எனவே வேளாண் விரிவா க்க மையம் மூலம் சாகுபடி பயிர்களை பார்வையிட்டு பரிசோதித்து பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண் டும்

என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்ற கழக மாவட்ட தலைவர் அப்துல் ஜப்பார் தலைமையில் கொடுக்கப்பட்ட மனுவில் கூறப்பட்டுள்ளதாவது: கடந்த 6ம் தேதி பாபர் மசூதி நிலத்தை ஒப்படைக்கக்கோரி பல இடங்களில் ஆர்ப்பாட்டம் நடந்தது. தஞ்சையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கே ற்க மதுக்கூர் நகர கிளையை சேர்ந்த பெண்கள் வந்தனர். வரும் வழியில் மதுக்கூர் ஒன் றிய இந்து முன்னணி தலை வர் போஸ் (எ) குபேந்திரன், அவரது தம்பி வக்கீல் ராஜ பிரபு மற்றும் சிலர் அவர் களை செல்லவிடாமல் தடு த்து திட்டினர். மேலும் வாகனங்கள், பெண்களை தாக்கி னர். இதுகுறித்து மதுக்கூர் காவல் நிலையத்தில் வழக்குப்பதிந்தும் கைது செய்யவில்லை. எனவே அவர் களை விரைந்து கைது செய்து அப்பகுதியில் சமூக நல்லிணக்கத்தை உறுதி செய்ய வேண்டும் என்று தெரிவித்துள்ளனர்.

பூதலூர் ஒன்றிய சிறு வியாபாரிகள் சங்கம் கொடுத்த மனுவில் தெரிவித்துள்ளதாவது: கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக பேருந்து நிலையம், சாலையோரங்களில் ஊராட்சி கட்டிடங்களில் வாடகை கொடுத்தும் தரை வாடகை கொடுத்தும் வியாபாரம் செய்து வாழ்ந்து வருகிறோம். ஊராட்சியின் வளர்ச்சிக்கு ஏற்ப வணிக வளாகம் கட்டுவதற்கான ஏற்பாடு செய்வதாகவும், எனவே கடைகளை முன்னறிவிப்பின்றி காலிச் செய்ய வேண்டுமென பஞ்சாயத்து நிர்வாக சிப்பந்திகள் வற்புறுத்துவது கடந்த சில நாட்களாக தொடர்ந்து வருகிறது. எனவே எங்களின் வாழ்வாதாரத்தை பாது காக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தஞ்சை சேப்பநாயக்கன்வாரியை சேர்ந்த சிவக்குமார் உள்ளிட்டோர் கொடுத்த மனுவில், சேப்பநாயக்கன்வாரி பகுதியில் அனைத்து சமூக மக்களும் சாதி பாகுபாடின்றி வாழ் ந்து வருகிறோம். எங்களி டையே கடந்த 50 ஆண்டுக ளாக எவ்வித சாதி மோதல் கள் இல்லை. இந்நிலையில் சிலரால் இப்பகுதியில் சாதி மோதல்கள் ஏற்படும் அபா யம் ஏற்பட்டுள்ளது. எனவே இதை தடுத்து நிறுத்த வேண் டும் என்று தெரிவித்தனர்.

**நிலக்கடலை பயிருக்கு ஜிப்சம் உரம் போட்டால் மகசூல் அதிகரிக்கும் வேளாண் அதிகாரி தகவல்**

பரமக்குடி, :ராமநாதபுரம் மாவட்டத்தில் மானாவாரி நிலத்தில் பயிரிடப்பட்டுள்ள நிலக்கடலை பயிருக்கு ஏக்கருக்கு 160 கிலோ ஜிப்சம் உரம் போட்டால் கூடுதல் மகசூல் பெறலாம் என்று வேளாண்மை உதவி இயக்குனர் கண்ணையா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து இவர் நேற்று பரமக்குடியில் செய்தியாளர்களிடம் கூறியதாவது: ‘‘ராமநாதபுரம் மாவட்டத்தில் மானாவாரி பயிராக நிலக்கடலை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. நிலக்கடலை விதைக்கப்பட்ட 40 முதல் 70 நாட்களுக்குள் அடி உரமாக ஏக்கருக்கு 80 கிலோ ஜிப்சம் தெளிக்க வேண்டும். மேலும் 80 கிலோ ஜிப்சத்தை செடிகளின் வேர்களுக்கு அருகில் வைத்து மண் அனைக்க வேண்டும். ஜிப்சத்தில் சுண்ணாம்பு சத்து 23 சதவீதம், சல்பர் சத்து 18 சதவீதம் உள்ளன. இவை வேரின் வளர்ச்சியை துரிதப்படுத்துவதுடன் அதிகப்படியான காய் பிடிக்கும். சுண்ணாம்புச்சத்து மண்ணில் எளிதில் நகராது. அதனால் செடிக்கு அருகில் ஜிப்சம் இடுவதால் அதிக பலன் கிடைக்கும். கடலையில் எண்ணெய்சத்து அதிகரிக்க சல்பர் உதவி செய்யும்.

நிலக்கடலையில் பூக்கள் விழுதுகளாக மாறி நிலத்திற்குள் சென்று கடலைகளாக மாறுகின்றன. பயிரிடப்பட்ட 26ம் நாளுக்கு பிறகு பூக்கும் பருவம் தொடங்கும். 45ம் நாளுக்குப் பிறகு விழுதுகள் இறங்க ஆரம்பிக்கும். அந்த நேரத்தில் மண்ணை கிளறிவிட்டு ஜிப்சம் போடுவது நல்லது. இந்த உரம் வேளாண்மை விரிவாக்க மையங்களில் தேவைக்கு ஏற்ப இருப்பு வைக்கப்பட்டு உள்ளது. அரசு உத்தரவுப்படி 50 சதவீதம் மானியத்தில் வழங்கப்படுகிறது. இதை பெற்று விவசாயிகள் பயன் அடையலாம்’’ என்றார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**துவரை விலை உயர்ந்தது சமையல் எண்ணை, கொண்டைக் கடலை விலை குறைந்தது**



விருதுநகர்,

விருதுநகர் மார்க்கெட்டில் சமையல் எண்ணை, கொண்டைக்கடலை ஆகியவற்றின் விலை குறைந்து உள்ள நிலையில் துவரை விலை உயர்ந்துள்ளது.

<u>உளுந்து விலை</u>

விருதுநகர் மார்க்கெட்டில் உளுந்து 100 கிலோ மூடை ரூ.4,600 முதல் ரூ.5,300 வரையிலும், உருட்டு உளுந்தம் பருப்பு ரூ.5,600 முதல் ரூ.7,100 வரையிலும், தொலி உளுந்தம் பருப்பு ரூ.5,300 முதல் ரூ.5,500 வரையிலும் விற்பனை ஆனது. துவரை 100 கிலோ மூடைக்கு ரூ.300 விலை உயர்ந்து ரூ.4,100 முதல் 4,900 வரையிலும், துவரம் பருப்பு ரூ.6,100 முதல் ரூ.7,300 வரையிலும் விற்பனை ஆனது. பாசிப்பயறு 100 கிலோ மூடை ரூ.6,500 முதல் ரூ.7,000 வரையிலும், பாசிப் பருப்பு 100 கிலோ மூடை ரூ.8,800 முதல் ரூ.9,200 வரையிலும் விற்பனை செய்யப் பட்டது. மல்லி லயன் ரகம் 40 கிலோ மூடை ரூ.3,000 முதல் ரூ.3,100 வரை விற்பனை ஆனது. வத்தல் சம்பா ரகம் குவிண்டால் ரூ.6,000 முதல் ரூ.6,800 வரையிலும், ஏ.சி. வத்தல் ரூ.7,300 முதல் ரூ.7,600 வரையிலும், முண்டு வத்தல் ரூ.4,200 முதல் ரூ.5,900 வரையிலும், சோடை வத்தல் ரூ.1,500 முதல் ரூ.1700 வரையிலும் விலை சொல்லப்பட் டது.

சமையல் எண்ணை

விருதுநகர் எண்ணை மார்க்கெட்டில் கடலை எண்ணை 15 கிலோவுக்கு ரூ.30 விலை குறைந்து 1,350 ஆகவும், நல்லெண்ணை 15 கிலோ ரூ.3,990 ஆகவும், தேங்காய் எண்ணை ரூ.1,605 ஆகவும், சூரிய காந்தி எண்ணை ரூ.1500 ஆகவும் விற்பனை ஆனது.

நிலக்கடலை பருப்பு 80 கிலோவுக்கு ரூ.200 விலை குறைந்து ரூ.3,800 ஆகவும், கடலை புண்ணாக்கு 100 கிலோ ரூ.3,200 ஆகவும், எள் புண்ணாக்கு 65 கிலோ ரூ.2,415 ஆகவும் விற்பனை ஆனது. பாமாயில் 15 கிலோ ரூ.970 ஆக விற்பனை செய்யப்பட் டது. சீனி விருதுநகர் சீனி மார்க்கெட்டில் சீனி குவிண்டால் ரூ.3,010 ஆகவும், கொண்டைக்கடலை குவிண்டாலுக்கு ரூ.500 விலை குறைந்து ரூ.3,000 ஆகவும், பொரி கடலை 55 கிலோ ரூ.2,560 ஆகவும், பட்டாணி 100 கிலோ ரூ.3,000 ஆகவும், பட்டாணி பருப்பு ரூ.3,150 முதல் ரூ.3,325 வரையிலும், மசூர் பருப்பு ரூ.4,450 முதல் ரூ.4,500 வரையிலும், ரவை 90 கிலோ ரூ.3,375 ஆகவும்,மைதா 90 கிலோ ரூ.3,090 ஆகவும் விலை சொல்லப்பட்டது.

காபி விருதுநகர் காபி மார்க்கெட்டில் காபி பிளாண்டேசன் பிபி ரகம் 50 கிலோ ரூ.9,000 ஆக வும், ஏ ரகம் ரூ.9,900 ஆகவும், சி ரகம் ரூ.7,900 ஆகவும், ரோபஸ்டா பிபி ரகம் ரூ.6,000 ஆகவும், பிளாக் பிரவுன் ரகம் ரூ.5,600 ஆகவும் விற்பனை ஆனது.

**டிசம்பர் 15 நிலவரம் சர்க்கரை உற்பத்தி 50 சதவீதம் சரிவு**



2013–14 சர்க்கரை பருவம் அக்டோபர் 1–ந் தேதியன்று தொடங்கியது. அன்று முதல் டிசம்பர் 15–ந் தேதி வரையிலான காலத்தில் சர்க்கரை உற்பத்தி 50 சதவீதம் சரிவடைந்து 25 லட்சம் டன்னாக குறைந்துள்ளது.

சர்வதேச அளவில் சர்க்கரை நுகர்வில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. நிதி நெருக்கடி உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளால் கரும்பு அரவைப் பணிகள் ஒரு மாதம் தாமதாமாக தொடங்கின. இதனால் சர்க்கரை உற்பத்தி குறைந்துள்ளது. சர்க்கரை ஆலைகள் நடப்பு பருவத்தில் இதுவரை 2.27 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதி செய்துள்ளன. நடப்பு பருவத்தில் நாட்டின் சர்க்கரை உற்பத்தி 2.50 கோடி டன்னாக இருக்கும் என சர்க்கரை ஆ

2 இலைகளுடன் கூடிய அரும்பை மட்டுமே விவசாயிகள் பறிக்க வேண்டும்
தேயிலை வாரியம் அறிவுரை

கொலக்கம்பை, தரமான தேயிலை தூள் உற்பத்தி செய்ய 2 இலைகளுடன் கூடிய அரும்பை மட்டுமே விவசாயிகள் அறுவடை செய்து தொழிற்சாலை களுக்கு வழங்க வேண்டும் என்று தேயிலை வாரியம் அறிவுறுத்தியதாக நீலகிரி சிறுதேயிலை உற்பத்தி யாளர்கள் சங்க தலைவர் ரமேஷ் போஜராஜன் தெரிவித்து உள்ளார்.

தரமற்ற பச்சை தேயிலை வினியோகம்

நீலகிரி மாவட்டத்தில் 60 ஆயிரம் சிறு தேயிலை விவசாயிகள் உள்ளனர். இந்த விவசாயிகள் பச்சை தேயிலை களை மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு தேயிலை தொழிற் சாலைகள் மற்றும் 120 சிறு தொழிற்சாலைகளுக்கு வினியோகம் செய்து வருகின் றனர். தேயிலை தூளுக்கு ஏல மையத்தில் கிடைக்கும் விலையை பொறுத்து பச்சை தேயிலைக்கு விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.

இந்த நிலையில் ஒரு சில விவசாயிகள் தரமான பச்சை தேயிலையை வினியோகம் செய்யாததால் தரமற்ற தேயிலை தூள் உற்பத்தி செய்யப்படுகிறது. இதன் காரணமாக தரமற்ற தேயிலை தூள் உற்பத்தி செய்யப்படுவ தால் விலை வீழ்ச்சி

ஏற்படுகி றது. இதன் காரணமாக பச்சை தேயிலைக்கு உரிய விலை வழங்க முடியவில்லை என்று தொழிற்சாலை நிர்வாகத்தினர் தெரிவிக்கின்றனர்.

<u>விலைப்பகிர்வு</u>

மேலும் ஒரு சில விவசாயிகள் கத்தி மூலம் பச்சை தேயிலையை அறுவடை செய்வது மற்றும் உரிய நேரத் தில் பச்சை தேயிலையை அறு வடை செய்யாமல் மாதம் ஒரு முறை பறிப்பதால் தரமற்ற தேயிலை தூள் உற்பத்தி செய்யப்படுகிறது. எனவே இதனை தவிர்க்க நீலகிரி சிறுதேயிலை உற்பத்தி யாளர்கள் சங்கம் சார்பில் சில நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டுள்ளது.

இது குறித்து சங்க தலைவர் ரமேஷ் போஜராஜன் கூறிய தாவது:- தேயிலை வாரியத் தின் உத்தரவுப்படி விலைப் பகிர்வு திட்டம் அனைத்து தொழிற் சாலை களிலும் அமல்படுத் தப்பட்டுள்ளது.

<u>தரமற்ற பச்சை தேயிலை வாங்க தடை</u>

இந்த நிலையில் ஒரு சில தொழிற்சாலைகளுக்கு விவசாயிகள் வழங்கும் தரமற்ற பச்சை தேயிலையின் மூலம் உற்பத்தி செய்யப்படும் தேயிலை தூள் ஏல மையங் களில் விற்பனை செல்லும் போது உரிய விலை கிடைப்பது இல்லை. இதனால் அனைத்து உற்பத்தியாளர்களும் பாதிப்புக்கு உள்ளாவதுடன் விவசாயிகளுக்கும் உரிய விலை வழங்க முடிய வில்லை.

இதுபோன்ற நிலை தொடராமல் இருக்க இனிமேல் தரமற்ற பச்சை தேயிலையை தொழிற் சாலை கள் வாங்குவது இல்லை என முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கு விவசாயிகள் ஒத்துழைப்பு கொடுத்து தரமான பச்சை தேயிலையை உரிய காலத்திற்குள் அறுவடை செய்து வழங்க வேண்டும். இதன் மூலம் தேயலை தூள் உற்பத்தியாளர்கள் மட்டு மல்லாமல் விவசாயிகளுக்கும் உரிய விலை கிடைக்கும் என்பதால் அனைவரும் இதற்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.

எனவே விவசாயிகள் தேயிலை வாரியத்தின் அறிவுரையின் படி ஒரு அரும்புடன் கூடிய 2 முதல் 3 இலைகள் மற்றும் இளவஞ்சி இலைகள் கொண்ட பச்சை தேயிலைகளை மட்டுமே பறித்து தொழிற்சாலைகளுக்கு விநியோகம் செய்ய வேண் டும். இவ்வாறு அவர் கூறினார்.

**திருப்பத்தூர், சிவகங்கை, காரைக்குடி வனப்பகுதியில் புள்ளி மான்கள் அதிகம் கணக்கெடுப்பில் கண்டுபிடிப்பு**



திருப்பத்தூர்,

திருப்பத்தூர், சிவ கங்கை, காரைக்குடி வனப் பகுதிகளில் புள்ளி மான்கள் அதிக அளவில் இருப்பது கண்டறியபப் பட்டுள்ளது.

<u>கணக்கெடுக்கும் பணி</u>

இந்தியா முழுவதும் வனப் பகுதியில் உள்ள விலங்குகளின் எண்ணிக்கை கணக்கெடுக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. சிவகங்கை மாவட் டத்தில் விலங்குகள் கணக் கெடுக்கும் பணி நேற்று தொடங்கியது. இந்த பணி வருகிற 21-ந்தேதி வரை நடை பெறுகிறது.

முன்னதாக கணக்கெடுப்பு குறித்து திருப்பத்தூர் அருகே உள்ள வேட்டங்குடிபட்டி பறவைகள் சரணாலயத்தில் வனஅலுவலர்கள் மற்றும் இந்த பணியில் ஈடுபட்டுள்ள தேவகோட்டை சேவுகன் அண்ணாமலை கல்லூரியை சேர்ந்த 15மாணவர்களுக்கு மாவட்ட அலுவலர் குருசாமி மற்றும் கோட்ட வன அலு வலர் சொர்ணப்பன் ஆகி யோர் பயிற்சி அளித்தனர்.

தொடர்ந்து நேற்று திருப் பத்தூர், சிவகங்கை, காரைக் குடி பகுதிகளில் சுமார் 7ஆயி ரம் ஹெக்டேர் பரப்பரளவு கொண்ட வனப்பகுதியில் வனத் துறையினர் வனச்சரகர் சண்முகம் தலைமையில் 7 குழுக்களாக சென்று வன விலங்குகளை

கணக்கெடுக்கும் பணியில் ஈடுபட்டனர். ஒவ் வொரு குழுக்களிலும் ஒரு வனவர், 2 வன பாதுகாவலர், 2 மாணவர்கள் இருந்தனர்.

ஆய்வு

திருப்பத்தூர், காரைக்குடி வனவர்கள் ஜெயராமன், செல் வமணி ஆகியோர் தலைமை யிலான குழுவினர்கள் சங்க ரபதி, வேட்டங்குடிபட்டி, கல் லுப்பட்டி, செஞ்சை, கம்ப னூர், மண்மலை-பிரான் மலை, எஸ்.வி.மங்கலம், வாராப்பூர் - கரிசல்பட்டி, எஸ்.வேலங்குடி, நாராயண மங்கலம், சிறுகனூர் மற்றும் சிவகங்கை பனங்குடி ஆகிய வனப்பகுதிகளில் விலங்குகள் கணக்கெடுக்கும் பணியை ஆய்வு செய்தனர்.

கணக்கெடுப்புக்கெடுப்பு பணியில் புலி, சிங்கம், புள்ளி மான்கள், கீரி, உடும்பு, காட்டு முயல், குரங்குகள், காட்டு எருமைகள் உள்பட பல்வேறு விலங்குகள் அடங்கும். மேலும் இந்த கணக்கெடுக்கும் பணிக்கு வனவர்கள் புவி நிலை நிறுத்த மானி கருவியை பயன்படுத்தி அதன் மூலம் விலங்குகள் நட மாட்டம் மற்றும் வனப்பகுதி களில அளவுகள் போன்ற வற்றை ஆய்வு செய்தனர்.

புள்ளிமான்கள் அதிகம்

சிவகங்கை மாவட்டத்தில் நடைபெற்ற விலங்குகள் கணக் கெடுக்கும் பணியில் இதுவரை புள்ளி மான்கள் அதிக அள வில் இருப்பதாகவும், சிங்கம் புணரி அடுத்த எஸ்.புதூர் வனப்பகுதிகளில் 6 காட்டு எருமைகள் கண்ட றியப்பட்டு கணக்கெடுத்ததாக வன அலுவலர் ஒருவர் கூறினார்.